கருநாடக அரசு

செம்மொழித் தமிழ்

முதல் மொழி

பத்தாம் வகுப்பு

10

Tamil - First Language

Part-1

@KTBS
NOT TO BE REPUBLISHED

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed on NCF – 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages; seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS, mathematics and 5th to 10th there are three core subjects namely mathematics, science and social science.

NCF – 2005 has a number of special features and they are:

- connecting knowledge to life activities.
- learning to shift from rote methods.
- enriching the curriculum beyond textbooks.
- learning experiences for the construction of knowledge.
- making examinations flexible and integrating them with classroom experiences.
- caring concerns within the democratic policy of the country.
- making education relevant to the present and future needs.
- softening the subject boundaries- integrated knowledge and the joy of learning.
- the child is the constructor of knowledge.

The new books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach.

The learner is encouraged to think, engage in activities, master skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are not examination oriented in their nature. On the other hand they help the learner in the all round development of his/her personality, thus help him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

The most important objectives of teaching language are listening, speaking, reading, writing and reference work. These skills have been given a lot of importance in all the language textbooks. Along with the inculcation of these skills, fundamental grammar, opportunities for learners to appreciate beauty and imbibe universal life values have been integrated in language textbooks. When learners master these competencies, they would stop studying textbooks for the sake of passing examinations. In order to help learners master these competencies, a number of paired and group activities, assignments and project work have been included in the textbooks. It is expected that these activities would help learner master communicative skills. Ultimately, it is expected that students master the art of learning to learn and make use of these competencies in real life. Textbooks for students X have a special significance. As any other new textbook they help learners' master skills and competencies and at the same time there is going to be a public examination based on them.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and printers in helping the Text Book Society in producing these textbooks. A few works of some writers and poets have been included in these textbooks. The textbook society is extremely grateful to them for giving their consent for the inclusion of these pieces in the textbooks.

Nagendra Kumar
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

Prof G S Mudambadithaya
Coordinator
Curriculum Revision and Textbook Preparation
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

© KTBS NOT TO BE REPUBLISHED

பாட நூல் அறிமுகம்

கருநாடக மாநிலத்தில் பிறமொழிச் சூழலில் வாழும் தமிழ் பயிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்,தமிழிலக்கிய நுகர்வாற்றலைப் பெறுவதற்குகந்த நிலையில்,கருநாடகப்பாடப் புத்தகக் கழகம் என்.சி.எப்-2005இன் அடிப்படையில் வடிவமைத்துக் கொடுத்த பாடத்திட்டமுறையினை உறுதுணையாகக் கொண்டு இப்பாடநூல் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரையுள்ள இலக்கியங்களைப் பற்றிய உணர்வினை மாணவர்களிடையே வளர்க்க வேண்டுமென்னும் உயரிய நோக்குடன் செய்யுள் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.தேசிய ஒருமைப்பாடு,நாட்டுப் புறவியல்,அறிவியல்,சுற்றுப்புறச்சூழல்,பயண இலக்கிய அறிவு,நகைச்சுவையோடு இழைந்திலங்கும் அறிவு,சிறுகதை,நாடகம் போன்றவற்றைப் பற்றி மாணவர்கள் அறிய வேண்டுமென்ற நிலையில் அவற்றில் ஈடுபாடு ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை ஆகியவற்றினை தெளிவுறுத்தும் நிலையிலும் வாழும் மண்ணில் புகழ் பெற்றிலங்கும் கன்னடக் கண்மணிகளின் சிறப்பினையும் மாணவர்கள் அறிந்துகொள்வது மிகவும் அவசியம் என்பதனையும் அறிவுறுத்தும் வகையிலும் உரைநடைப்பகுதி அமைந்துள்ளது.செய்யுள் உரைநடைப்பகுதிகளில் மாணவர்களின் அறிவுத்திறனைச் சோதிக்கும் வகையில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பாட நூலை உருவாக்கும் நற்பேற்றினை எங்களுக்கு அளித்தமைக்காக கருநாடக மாநிலப்பாடப்புத்தகக்கழகத்திற்கும் அதன் நிருவாக இயக்குநருக்கும் நூல் செம்மையுற அமையத் துணை நின்ற உதவி இயக்குநர் திருமதி.சந்திரகலா அவர்கட்கும் கருநாடக மாநிலக்கல்வித்துறை(பாடநூல்)இணை இயக்குநர், துணை இயக்குநர் மற்றும் பிற அலுவலர்கட்கும் பாட நூல் குழுவினரின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,செய்யுள் மற்றும் உரைநடைப்பகுதிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள கவிதை,கட்டுரை,சிறுகதை,நாடகம் முதலியவற்றை பயன்படுத்திக் கொள்ள அனுமதி நல்கிய தமிழ் எழுத்தாளப் பெருமக்களுக்கும் இலக்கிய ஆர்வலர்கட்கும் அன்பார்ந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

முனைவர்.இரா.சீனிவாசன்
தலைவர்,பாடநூற்குழு
மற்றும் குழு உறுப்பினர்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

THE CONSTITUTION OF INDIA

PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a [1]**[SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC]** and to secure to all its citizens :

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity; and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the [2][unity and integrity of the Nation];

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949 do **HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.**

©KTBS NOT TO BE REPUBLISHED

---

1. Subs. by the Constitution (Forty-second Amendment) Act, 1976, Sec.2, for "Sovereign Democratic Republic" (w.e.f. 3.1.1977)
2. Subs. by the Constitution (Forty-second Amendment) Act, 1976, Sec.2, for "Unity of the Nation" (w.e.f. 3.1.1977)

CONSTITUTION OF INDIA

Part III (Articles 12 – 35)

(Subject to certain conditions, some exceptions and reasonable restrictions)

guarantees these

Fundamental Rights

Right to Equality

- before law and equal protection of laws;
- irrespective of religion, race, caste, sex or place of birth;
- of opportunity in public employment;
- by abolition of untouchability and titles.

Right to Freedom

- of expression, assembly, association, movement, residence and profession;
- of certain protections in respect of conviction for offences;
- of protection of life and personal liberty;
- of free and compulsory education for children between the age of six and fourteen years;
- of protection against arrest and detention in certain cases.

Right against Exploitation

- for prohibition of traffic in human beings and forced labour;
- for prohibition of employment of children in hazardous jobs.

Right to Freedom of Religion

- freedom of conscience and free profession, practice and propagation of religion;
- freedom to manage religious affairs;
- freedom as to payment of taxes for promotion of any particular religion;
- freedom as to attendance at religious instruction or religious worship in educational institutions wholly maintained by the State.

Cultural and Educational Rights

- for protection of interests of minorities to conserve their language, script and culture;
- for minorities to establish and administer educational institutions of their choice.

Right to Constitutional Remedies

- by issuance of directions or orders or writs by the Supreme Court and High Courts for enforcement of these Fundamental Rights.

@KTBS NOT TO BE REPUBLISHED

Text Book Committee

Chair Person : **Dr. R. Srinivasan,** Retd. Principal & Professor of Tamil # 3668, 8th Cross, 13th Main, HAL 2nd Stage, Indira Nagar, Bengaluru-8.

Members : **Mr. G. Subramanian,** Retd. Principal & Tamil Lecturer, BBMP Junior College & High School, Austin Town, Bengaluru-47.

: **Dr. R. Saraswathi,** Tamil Teacher, Bengaluru Tamil Sanga, Kamarasar High School, Venugopalasamy Temple Street, Anwar Layout, Bengaluru-45.

: **Mr. N. Krishnamoorthy,** Tamil Lecturer, R.B.A.N.M.S.Degree College, Bengaluru-42.

: **Mrs.R.Padmavathy,** Principal & Tamil Lecturer, BBMP Dispensary Road, Bengaluru.

: **Mrs. S. Amudha,** Tamil Lecturer, Goodwill Christian College For Women, Fraser Town, Bengaluru-05.

Scrutinizer : **Dr. Veerappan. P,** Professor And Head, DESSH Regional Institute of Education, Manasagangotri, Mysuru-6

Chief Co-Ordinator: **Mr. G. S. Mudambadithaya,** Karnataka Text Book Society Bengaluru-85

Advisors : **Sri. Nagendra Kumar ,** Managing Director, Karnataka Text Book society, Bengaluru-85.

: **Sri. Panduranga,** Joint Director, karnataka Text book society, Bengaluru-85

Programme Co-Ordinator : **Smt. Jayalakshmi C.D,** A.D.P.I. Karnataka Text Book Society Bengaluru-85.

@KTBS NOT TO BE REPUBLISHED

ಪರಿಷ್ಕರಣೆ ಕುರಿತು

ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಬಗ್ಗೆ ಪ್ರಕಟಗೊಂಡ ಸಾರ್ವಜನಿಕ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಗಮನಿಸಿ ಮಾನ್ಯ ಮುಖ್ಯಮಂತ್ರಿಯವರೂ ಅರ್ಥಸಚಿವರೂ ಆಗಿರುವ ಶ್ರೀ ಸಿದ್ದರಾಮಯ್ಯನವರು ತಮ್ಮ 2014–15 ರ ಬಜೆಟ್‌ನಲ್ಲಿ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ರಚಿಸುವ ಘೋಷಣೆ ಮಾಡಿದರು. ತಜ್ಞರು ಅನುಸರಿಸಬೇಕಾದ ಮೂಲ ಆಶಯವನ್ನು ಹೀಗೆ ಹೇಳಿದರು: "ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯ, ನೈತಿಕಮೌಲ್ಯಗಳು, ವ್ಯಕ್ತಿತ್ವವಿಕಸನ, ವೈಜ್ಞಾನಿಕ ಮತ್ತು ವೈಚಾರಿಕ ಮನೋಭಾವ, ಜಾತ್ಯತೀತತೆ ಮತ್ತು ರಾಷ್ಟ್ರಿಯ ಬದ್ಧತೆಗಳಿಗೆ ಅನುವಾಗುವಂತೆ ತಜ್ಞರ ಸಮಿತಿಯನ್ನು ಪುನರ್ ರಚಿಸಲಾಗುವುದು" – ಇದು ಬಜೆಟ್ ಭಾಷಣದಲ್ಲಿ ಸಾದರಪಡಿಸಿದ ಆಶಯ.

ಆನಂತರ ಶಿಕ್ಷಣ ಇಲಾಖೆಯು ಒಂದರಿಂದ ಹತ್ತನೇ ತರಗತಿಯವರೆಗಿನ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣೆಗಾಗಿ 27 ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ದಿನಾಂಕ: 24.11.2014 ರಂದು ಆದೇಶಹೊರಡಿಸಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ವಿಷಯವಾರು ಮತ್ತು ತರಗತಿವಾರು ಮಾನದಂಡಕ್ಕನುಗುಣವಾಗಿ ರಚಿತವಾದವು. ವಿವಿಧ ಪಠ್ಯವಿಷಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರು, ಅಧ್ಯಾಪಕರು ಈ ಸಮಿತಿಗಳಲ್ಲಿದ್ದಾರೆ. ಈಗಾಗಲೇ ಲಿಖಿತವಾಗಿ ಬಂದಿರುವ ಅನೇಕ ಆಕ್ಷೇಪಗಳು ಮತ್ತು ವಿಶ್ಲೇಷಣೆಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಿ, ತಪ್ಪು ಒಪ್ಪುಗಳ ಬಗ್ಗೆ ನಿರ್ಣಯಿಸಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ ಹೊಣೆಹೊತ್ತ ಈ ಸಮಿತಿಗಳಿಗೆ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪಠ್ಯವಸ್ತುವನ್ನು ಪರಿಷ್ಕರಿಸಿ ನಂತರ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಷ್ಕರಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು 24.11.2014ರ ಆದೇಶದಲ್ಲೇ ನೀಡಲಾಗಿತ್ತು. ಆನಂತರ 19.09.2015 ರಂದು ಹೊಸ ಆದೇಶ ಹೊರಡಿಸಿ 'ಅಗತ್ಯವಿದ್ದಲ್ಲಿ ಪುನರ್ ರಚಿಸುವ' ಸ್ವಾತಂತ್ರ್ಯವನ್ನು ನೀಡಲಾಯಿತು. ಹೀಗೆ ಸಮಗ್ರ ಪರಿಷ್ಕರಣೆಗೊಂಡ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು 2016–17ರ ಬದಲು 2017–18ನೇ ಶೈಕ್ಷಣಿಕ ವರ್ಷದಲ್ಲಿ ಜಾರಿ ಗೊಳಿಸಲಾಗುವುದೆಂದು ಇದೇ ಆದೇಶದಲ್ಲಿ ತಿಳಿಸಲಾಯಿತು.

ಅನೇಕ ವ್ಯಕ್ತಿಗಳೂ ಸಂಘಟನೆಗಳೂ ಸ್ವಯಂಪ್ರೇರಿತರಾಗಿ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಮಾಹಿತಿದೋಷ, ಆಶಯದೋಷಗಳನ್ನು ಪಟ್ಟಿಮಾಡಿ ಶಿಕ್ಷಣ ಸಚಿವರಿಗೆ, ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘಕ್ಕೆ ಕಳುಹಿಸಿದ್ದರು. ಅವುಗಳ ಪರಿಶೀಲನೆಮಾಡಿದ್ದಲ್ಲದೆ, ಸಮಿತಿಗಳಾಚೆಗೆ ಅನೇಕ

© KTBS NOT TO BE REPUBLISHED

ಸಂವಾದಗಳನ್ನು ಏರ್ಪಡಿಸಿ ವಿಚಾರ ವಿನಿಮಯ ಮಾಡಿಕೊಂಡಿದ್ದೇವೆ. ಪ್ರಾಥಮಿಕ ಮತ್ತು ಪ್ರೌಢಶಾಲಾ ಅಧ್ಯಾಪಕರ ಸಂಘಗಳ ಜೊತೆ ಚರ್ಚಿಸಿದ್ದಲ್ಲದೆ ಪ್ರಶ್ನಾವಳಿ ಸಿದ್ಧಪಡಿಸಿ ಅಧ್ಯಾಪಕರಿಗೆ ಕಳಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಗಳನ್ನು ಸಂಗ್ರಹಿಸಲಾಗಿದೆ. ಅಧ್ಯಾಪಕರು, ವಿಷಯಪರಿವೀಕ್ಷಕರು ಮತ್ತು ಡಯಟ್ ಪ್ರಾಂಶುಪಾಲರ ಪ್ರತ್ಯೇಕ ಸಭೆಗಳನ್ನು ನಡೆಸಿ ವಿಶ್ಲೇಷಣಾತ್ಮಕ ಅಭಿಮತಗಳನ್ನು ಪಡೆಯಲಾಗಿದೆ. ವಿಜ್ಞಾನ, ಸಮಾಜವಿಜ್ಞಾನ, ಗಣಿತ, ಭಾಷೆ ಸಾಹಿತ್ಯಗಳಿಗೆ ಸಂಬಂಧಿಸಿದ ತಜ್ಞರಿಗೆ ಮೊದಲೇ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಕಳುಹಿಸಿ ಆನಂತರ ಸಭೆ ನಡೆಸಿ ಚರ್ಚಿಸಲಾಗಿದೆ. ಮಹಿಳಾ ಸಂಘಟನೆ ಹಾಗೂ ವಿಜ್ಞಾನ ಸಂಬಂಧಿ ಸಂಸ್ಥೆಗಳನ್ನು ಆಹ್ವಾನಿಸಿ ಚಿಂತನೆ ನಡೆಸಲಾಗಿದೆ. ಹೀಗೆ ಎಲ್ಲಾ ಮೂಲಗಳಿಂದ ಪಡೆದ ಅರಿವಿನ ಆಧಾರದ ಮೇಲೆ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಅಗತ್ಯವಿದ್ದಕಡೆ ಪರಿಷ್ಕರಿಸಲಾಗಿದೆ.

ಬಹುಮುಖ್ಯವಾದ ಇನ್ನೊಂದು ಸಂಗತಿಯನ್ನು ಇಲ್ಲಿ ಹೇಳಬೇಕು. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ (N.C.E.R.T) ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ತೌಲನಿಕವಾಗಿ ಅಧ್ಯಯನ ಮಾಡಿ ಸಲಹೆಗಳನ್ನು ನೀಡಲು ವಿಜ್ಞಾನ, ಗಣಿತ ಮತ್ತು ಸಮಾಜವಿಜ್ಞಾನಕ್ಕೆ ಸಂಬಂಧಿಸಿದಂತೆ ತಜ್ಞರ ಮೂರು ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಲಾಯಿತು. ಈ ಸಮಿತಿಗಳು ನೀಡಿದ ತೌಲನಿಕ ವಿಶ್ಲೇಷಣೆ ಮತ್ತು ಸಲಹೆಗಳನ್ನು ಆಧರಿಸಿ ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟವನ್ನು ಹೆಚ್ಚಿಸಲಾಗಿದೆ. ಕೇಂದ್ರೀಯ ಶಾಲಾ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳಿಗಿಂತ ನಮ್ಮ ರಾಜ್ಯದ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಗುಣಮಟ್ಟ ಕಡಿಮೆಯಾಗದಂತೆ ಕಾಯ್ದುಕೊಳ್ಳಲಾಗಿದೆ. ಜೊತೆಗೆ ಆಂಧ್ರ, ತಮಿಳುನಾಡು, ಮಹಾರಾಷ್ಟ್ರಗಳ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಜೊತೆ ನಮ್ಮ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳನ್ನು ಪರಿಶೀಲಿಸಲಾಗಿದೆ.

ಇನ್ನೊಂದು ಸ್ಪಷ್ಟನೆಯನ್ನು ನೀಡಲು ಬಯಸುತ್ತೇನೆ. ನಮ್ಮ ಸಮಿತಿಗಳು ಮಾಡಿರುವುದು ಪರಿಷ್ಕರಣೆಯೇ ಹೊರತು ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸಮಗ್ರ ರಚನೆಯಲ್ಲ. ಆದ್ದರಿಂದ ಈಗಾಗಲೇ ರಚಿತವಾಗಿರುವ ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಸ್ವರೂಪಕ್ಕೆ ಎಲ್ಲಿಯೂ ಧಕ್ಕೆಯುಂಟುಮಾಡಿಲ್ಲ. ಲಿಂಗತ್ವ ಸಮಾನತೆ, ಪ್ರಾದೇಶಿಕ ಪ್ರಾತಿನಿಧ್ಯ, ರಾಷ್ಟ್ರೀಯ ಸಮಗ್ರತೆ, ಸಮಾನತೆ, ಸಾಮಾಜಿಕ ಸಾಮರಸ್ಯಗಳ ಹಿನ್ನೆಲೆಯಲ್ಲಿ ಕೆಲವು ಪರಿಷ್ಕರಣೆಗಳು ನಡೆದಿವೆ. ಹೀಗೆ ಪರಿಷ್ಕರಿಸುವಾಗ ರಾಷ್ಟ್ರೀಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟು ಮತ್ತು ರಾಜ್ಯ ಪಠ್ಯಕ್ರಮ ಚೌಕಟ್ಟುಗಳನ್ನು ಮೀರಿಲ್ಲವೆಂದು

@KTBS NOT TO BE REPUBLISHED

ತಿಳಿಸಬಯಸುತ್ತೇನೆ: ಜೊತೆಗೆ ನಮ್ಮ ಸಂವಿಧಾನದ ಆಶಯಗಳನ್ನು ಅನುಸರಿಸಲಾಗಿದೆ. ಸಮಿತಿಗಳು ಮಾಡಿದ ಪರಿಷ್ಕರಣೆಯನ್ನು ಮತ್ತೊಮ್ಮೆ ಪರಿಶೀಲಿಸಲು ವಿಷಯವಾರು ಉನ್ನತ ಪರಿಶೀಲನ ಸಮಿತಿಗಳನ್ನು ರಚಿಸಿ ಅಭಿಪ್ರಾಯಪಡೆದು ಅಳವಡಿಸಲಾಗಿದೆ.

ಹೀಗೆ ಕ್ರಮಬದ್ಧವಾಗಿ ನಡೆದ ಕೆಲಸಕ್ಕೆ ತಮ್ಮನ್ನು ತಾವು ಸಂಪೂರ್ಣ ತೊಡಗಿಸಿಕೊಂಡ 27 ಸಮಿತಿಗಳ ಅಧ್ಯಕ್ಷರು ಮತ್ತು ಸದಸ್ಯರನ್ನು ಹಾಗೂ ಉನ್ನತ ಪರಿಶೀಲನಾ ಸಮಿತಿಯ ಸಮಸ್ತರನ್ನು ಕೃತಜ್ಞತೆಯಿಂದ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಅಂತೆಯೇ ಸಮಿತಿಗಳ ಕೆಲಸ ಸುಗಮವಾಗಿ ನಡೆಯುವಂತೆ ವ್ಯವಸ್ಥೆಮಾಡಲು ಕಾರ್ಯಕ್ರಮ ಅಧಿಕಾರಿಗಳಾಗಿ ನಿಷ್ಠೆಯಿಂದ ದುಡಿದ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘದ ಎಲ್ಲಾ ಅಧಿಕಾರಿಗಳನ್ನೂ ನೆನೆಯುತ್ತೇವೆ. ಸಹಕರಿಸಿದ ಸಿಬ್ಬಂದಿಗೂ ನಮ್ಮ ವಂದನೆಗಳು. ಅಭಿಪ್ರಾಯ ನೀಡಿ ಸಹಕರಿಸಿದ ಸರ್ವ ಸಂಘಟನೆಗಳು ಮತ್ತು ತಜ್ಞರಿಗೆ ಧನ್ಯವಾದಗಳು.

ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ.
ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ.)
ಬೆಂಗಳೂರು

(ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ)
ಪಠ್ಯಪುಸ್ತಕ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ
ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ (ರಿ)
ಬೆಂಗಳೂರು

@KTBS
NOT TO BE REPUBLISHED

ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿಗಳ ವಿವರ

ಸರ್ವಾಧ್ಯಕ್ಷರು

ಪ್ರೊ. ಬರಗೂರು ರಾಮಚಂದ್ರಪ್ಪ. ರಾಜ್ಯ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಮಿತಿ, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ) ಬೆಂಗಳೂರು–85

ಪರಿಷ್ಕರಣ ಸಮಿತಿ

ಅಧ್ಯಕ್ಷರು

ಡಾ. ಸುಧಾಕರ, ನಿವೃತ್ತ ತಮಿಳು ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಪ್ರಥಮದರ್ಜೆ ಕಾಲೇಜು, ಉರಿಗಾಂ,ಕೆ.ಜಿ.ಎಫ್.

ಸದಸ್ಯರು

ಶ್ರೀ ಆಶೀರ್ವಾದಂ, ಸ. ಶಿ, ಬೆಂಗಳೂರು ತಮಿಳು ಸಂಘಂ ಕಾಮರಾಜರ ಪ್ರೌಢಶಾಲೆ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀ ಬಾಬು, SVCK ಪ್ರೌಢಶಾಲೆ, 2ನೇ ಮುಖ್ಯರಸ್ತೆ, ತ್ಯಾಗರಾಜ ನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಅಮುದ, ಉಪನ್ಯಾಸಕರು, ಜಿ.ಸಿ.ಸಿ.ಡಬ್ಲ್ಯು ಕಾಲೇಜು, ಫ್ರೇಜರ್‌ಟೌನ್, ಶಿವಾಜಿನಗರ, ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ. ಕಾತ್ಯಾಯಿನಿ, ಸಹ ಶಿಕ್ಷಕರು, ಆಲ್ಫಾನ್ಸ್ ಹೈಸ್ಕೂಲ್, ಡೇವಿಸ್‌ರೋಡ್, ಥಾಮಸ್‌ಟೌನ್, ಬೆಂಗಳೂರು.

ಪಠ್ಯಪುಸ್ತಕಗಳ ಉನ್ನತ ಸಮಿತಿ ತಜ್ಞರುಗಳು

ಡಾ. ಕಾರ್ಲಾಸ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಡಾ. ಲಿಂಡಾಕ್ರಿಸ್ಟ್, ನಿವೃತ್ತ ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, 253, 1ನೇ ಅಡ್ಡರಸ್ತೆ, 2ನೇ ಬ್ಲಾಕ್, ಬನಶಂಕರಿ 3ನೇ ಹಂತ (ಕತ್ರಿಗುಪ್ಪೆ), ಜನತಾಬಜಾರ್, ಬೆಂಗಳೂರು.

ಪ್ರೊ. ಸೀತಾ, ಪ್ರಾಧ್ಯಾಪಕರು, ಸೆಂಟ್ ಫಿಲೋಮಿನಾ ಕಾಲೇಜು, ಬನ್ನಿಮಂಟಪ, ಮೈಸೂರು–ಬೆಂಗಳೂರು ರಸ್ತೆ, ಮೈಸೂರು.

ಸಲಹೆ ಮತ್ತು ಮಾರ್ಗದರ್ಶನ:

ಶ್ರೀ ಎಂ. ಪಿ. ಮಾದೇಗೌಡ, ವ್ಯವಸ್ಥಾಪಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

ಶ್ರೀಮತಿ ಎಂ.ಡಿ. ಉಷಾ, ಉಪ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

ಕಾರ್ಯಕ್ರಮ ಸಂಯೋಜಕರು :

ಶ್ರೀ ಶಂಕರೇ ಗೌಡ ಎಲ್. ಸಹಾಯಕ ನಿರ್ದೇಶಕರು, ಕರ್ನಾಟಕ ಪಠ್ಯಪುಸ್ತಕ ಸಂಘ(ರಿ), ಬೆಂಗಳೂರು.

@KTBS NOT TO BE REPUBLISHED

பொருளடக்கம்

I9U8J3

வ. எண்	தலைப்பு	பக்கம்
	1. செய்யுள்	
அ **I.**	இறைவாழ்த்து	
	1) திருவாசகம்	1
	2) தேம்பாவணி	4
	3) சீறாப்புராணம்	6
II.	அறவுரை	
	1) திருக்குறள்	8
	2) திரிகடுகம்	15
III.	தொடர் நிலைச் செய்யுள் :	
	1) கம்பராமாயணம்	17
IV.	சங்க இலக்கியம் :	
	1) குறுந்தொகை	28
V.	பல்சுவை :	
	1) மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்	30
	2) மதுரைச் சொக்கநாதர் திருவிளையாடலம்மானை	34
	3) தனிப்பாடல்	37

NOT TO BE REPUBLISHED @KTBS

வ. எண்	தலைப்பு	பக்கம்
VI.	மறுமலர்ச்சிக்கவிதைகள்	
	1) பள்ளம் மேடுள்ள பாதையிலே	40
	2) நிலக்கரி	42
	2. உரைநடை	
1.	உறுசுவை உரையாடல் - திரு.அ.க. நவநீத கிருட்டிணன்	45
2.	வானம்பாடி - பேராசிரியர்.மு. வரதராசனார்	52
3.	சுற்றுச்சூழல் - தென்கச்சி. கோ. சுவாமிநாதன்	61
4.	உண்டாலம்ம இவ்வுலகம் - பேராசிரியர் முனைவர்.இரா.மோகன்	67
5.	இலட்சியம் - கவிப்பேரரசு வைரமுத்து	74
	இலக்கணம்	
	1) சொல்	79
	2) யாப்பு	81

NOT TO BE REPUBLISHED @KTBS

I. வாழ்த்து

இறை வாழ்த்து

1. திருவாசகம்

E1W4E3

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே

தீது இலா நன்மைத் திருவருள் குன்றே
திருப் பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவது ஓர்வகை அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே

- மாணிக்கவாசகர்

@KTBS
NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையாரும் உள்ளன. திருவாசகம் கல் நெஞ்சையும் கசிந்துருகச் செய்யுமாதலால் "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" எனும் தொடர் வழங்கலாயிற்று. இப்பாடல் தில்லையில் மாணிக்கவாசகர் அருளிய 'கோயில் திருப்பதிகம்' என்னும் பதிகத்தில் அமைந்துள்ளது.

ஆசிரியர்குறிப்பு :

சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர்.இவர் திருவாதவூரில் பிறந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்; பாண்டியனுக்காகக் குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப்பெற்றவர். திருவாசகமும் திருக்கோவையாரும் இவர் அருளியவை. இவர்தம் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள் :

அருவாம்-அருஆம்-உருவம் இல்லாததாகும்;சொல்லுதற்கு அரிய-சொல்லினால் விளக்க முடியாத ; உறை-தங்கும்.

கருத்துரை :

ஒளியாய் விளங்கும் திருமேனிஉடையவனே! உருவம் இல்லாத சிறந்தோனே! சொல்லுதற்கு அரிய பெருமையுடைய முதல் இடை முடிவானவனே! பாசக் கட்டினை ஒழிக்கும் பேரின்பப் பெருங்கடலே! குற்றமற்ற நலம் பொருந்திய திருவருள் குன்றே! திருப்பெருந்துறைப் பெருமானே! நீ குருவாய் வந்து உன் திருவடிகளை எனக்கு அருளிய பின்னர் நீ என்னைக் கைவிட்டுப் போவதற்குரிய முறையாதென்று சொல்லி அருள்வாய்!

@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. எப்பொருட்கும் முதல் இடை_____ஆனவனே!

   அ) உருவம் ஆ) குன்றம் இ) முடிவு ஈ) கடல்

2. தீது இலா நன்மைத்_______குன்றே!

   அ) ஆதியே! ஆ) ஆனந்தம் இ) உறை ஈ) திருவருள்

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார்?
2. இறைவன் ஆனந்த மாக்கடலாவது எப்போது?
3. எத்தகைய நன்மைத் திருவருள் குன்றானவன் இறைவன்?

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பினை எழுதுக.

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

1. ஆதியே நடுவே அந்தமே!
2. தீதிலா நன்மைத் திருவருட் குன்றே!

மொழிப்பயிற்சி.

1. **சேர்த்து எழுதுக :**

   சோதியாய் + தோன்றும் ; அரு + ஆம் ; சொல்லுதற்கு + அரிய ; தீது+இலாத ; திருவருள்+குன்றே .

2. **பிரித்து எழுதுக :**

   பெருந்துறையுறை; போவதோர்; இணையடி .

3. **எதிர்ச்சொல் தருக :**

   உருவம்; ஆதி; பந்தம்; தீது

4. **வாக்கியத்தில் அமைக்க :**

   அருவம்; பந்தம்; ஆனந்தம்; தீது; நன்மை .

5. **எழுத்து மாறுபடுவதால் பொருள் மாறுபடுதலைத் தெரிந்துகொள்க:**

   சோதி / சேதி ; உருவம் / அருவம் ; சொல் / செல் ; அரிய / அறிய ; நடு / நாடு ; அறு / ஆறு ; உறை / உரை .

©KTBS NOT TO BE REPUBLISHED

2. தேம்பாவணி
காட்சிப்படலம்

E3Z6S9

ஆயர்கள் இறைவனை வழிபடல்

அவனடி பணிந்து மகிழல்

கொழுந்துறும் குளிர்ந்த முல்லைகொண்ட கோவர்கூட்டமும்
எழுந்துறும் குடத்தியாரும் ஏகிஆய காட்சியால்
விழுந்துறும் களிப்பு விஞ்சி வேதநாதன் மேற்பதம்
தொழுந்தொறும்தொழுந்தொறும் துளங்குகின்ற தோற்றமே!

- **வீரமாமுனிவர்**

நூல்குறிப்பு :

'தேம்பாவணி' என்னும் இக்காவிய நூல் வாடாத மாலை என்று பொருள்படும் . இது மேலை நாட்டுக் கதையைத் தமிழ் மரபில் அமைந்து கூறும் நூலாகும். இந்நூல் இயேசுவின் தந்தை சூசையப்பரின் வரலாற்றைக் கூறும். இதனை இயற்றியவர் வீரமாமுனிவர் .

ஆசிரியர்குறிப்பு :

வீரமாமுனிவர் (1680-1742) இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரின் இயற்பெயர் கான்ஸ்டெண்டின் ஜோசப் பெஸ்கி. இருபது வயதில் தமிழகம் வந்தார் . இவர் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்தார் . திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை போன்ற நூல்களையும் பரமார்த்த குருகதை போன்ற உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலையும் "சதுரகராதி" என்ற பெயரில் தமிழில் அகராதியையும் வெளியிட்டார் .

அருஞ்சொற்பொருள் :

கொழுந்து-துளிர்இலை ; உறும்-மிகுதி(உரிச்சொல்) ; குடத்தியார்-பால்,தயிர்க்குடங்களைச்சுமக்கும்பெண்கள்; ஏகி-சென்று ; விழுந்துறும்-சிறப்பு மிகுந்த ; களிப்பு-மகிழ்ச்சி ; தொழுந்தொறும்-வணங்கும் போதெல்லாம்; துளங்கு-விளங்கு .

@KTBS NOT TO BE REPUBLISHED

கருத்துரை :

துளிர்க்கும் இலைகள் மிகுந்தும் குளிர்ச்சி நிறைந்தும் விளங்கும் முல்லை நிலத்தில் மகிழ்வுடன் குடத்தியரோடு சென்ற கோவலர்கள் வேத நாயகனான ஏசுவின் திருவடியை வணங்கும் போதெல்லாம் மேலும் விளங்கித் தோன்றுவர் .

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க .

1. முல்லை நிலம் சிறந்து காணப்படும் காலம்

அ) துளிர்இலை மிகுந்து இருக்கும் போது .

ஆ) மழைபொழியும் போது.

இ) குடத்தியர் வணங்கும் போது.

ஈ) கோவர் கூட்டம் இருக்கும்போது .

II. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக.

1. வேதநாதனின் தோற்றம் மிகச் சிறந்து காண்பதற்கான காரணம் பற்றி எழுதுக .

மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக

கொழுந்து+உறும்; மேல்+பதம் .

செயல்திறன்

கலந்துரையாடல்.

பல்வேறு கிறித்துவத் தமிழிலக்கியங்களின் நூல்களைப் பட்டியலிடுக. அவற்றின் ஒரு சில சிறப்புகளைக் குறித்துக் கலந்துரையாடுக .

@KTBS NOT TO BE REPUBLISHED

3. சீறாப்புராணம்
விலாதத்துக்காண்டம்

(நதி கடந்த படலம்)

T3E4C8

கரைபுரண் டுள்ளகங் களித்துக் கானிடைத்
திரவியந் திரைக்கரத் தெடுத்துச் சிந்தியே
குரைகட லெனுநதி குருசில் நன்நபி
மரைமல ரடிதொழ வந்த போலுமே

- உமறுப்புலவர்

© KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

‘ சீறா’ என்னும் அரபுச் சொல்லிற்கு "பெரியோரது புகழ்" என்பது பொருள். இசுலாமிய மதப்பெரியோராகிய முகம்மது நபியவர்களின் வரலாற்றைக் கூறுதலால் இந்நூல் சீறாப்புராணம் எனப்பெயர் பெற்றது .

இந்நூல் விலாதத்துக் காண்டம் , நுபுவத்துக் காண்டம் , ஹஜீறத்துக் காண்டம் என மூன்று காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது; தொண்ணூற்றிரண்டு படலங்களைக் கொண்டது .

இப்பாடல் நதி கடந்த படலத்தில் 14-ம் பாடலாக அமைந்துள்ளது.

ஆசிரியர்குறிப்பு :

இந்நூலாசிரியர் உமறுப்புலவர். தந்தையார் சேகுமுதலியார்; பிறப்பிடம் கீழக்கரையைச் சார்ந்த ஒரு சிற்றூர். உமறுப்புலவரின் ஆசிரியர் கடிகை முத்துப்புலவர். உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல் காசீம், எட்டையபுர மன்னரது அவைக்களப் புலவராய் விளங்கியவர். இவரது காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு .

அருஞ்சொற்பொருள்

கான்-காடு ; திரவியம்- பொருள் ; குரை-ஒலி.

கருத்துரை :

பெருக்கெடுத்து வந்த ஆறு, தனது உள்ளக் களிப்பைக் கரைகளில் பொங்கிப் புரண்டுகாட்டி, குறிஞ்சி நிலத் திரவியங்களை எல்லாம் தனது அலைக் கரங்களால் அள்ளிக்கொண்டு வந்து, தூதர் முகமது அவர்களின் பாதங்களில் தூற்றியது போலத் தொழுது சிந்தியது .

(குறிஞ்சி நிலத்துச் சிறந்த பொருள்களான தினை, தேன், கத்தூரி,மயிற்பீலி ஆகியன நபிகளாரின் திருவடிகளில் சிதறின என்க) .

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. ஒலிக்கும் கடல்போன்ற நதி, கானிடை_____ஓடுகிறது .

அ) கரைபுரண்டு; ஆ) மலரடிதொழ;

இ) வயலில்; ஈ) திரவியம் .

2. கரை, திரவியம். குரை, மரை எனத்தொடங்கும் அடிகள் நான்கிலும்

அ) எதுகைஉள்ளது; ஆ) மோனைஉள்ளது;

இ) முரண்உள்ளது; ஈ) அந்தாதிஉள்ளது .

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக

1. பேராறு திரவியங்களை அள்ளிவருவதற்கான உவமையாவது யாது ?

2. குரைகடலெனும் நதி, யாரை வணங்கிட வருகிறது என்கிறார் உமறுப்புலவர் ?

III. ஐந்து வாக்கியத்தில் விடை எழுதுக

1. உமறுப்புலவர், நதியின் பெருக்கெடுப்பு பற்றிக் கூறுவன யாவை ?

மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக

கரைபுரண்டு+உள்ளகம் ; திரை+கரம் ;

கரத்து+எடுத்து; மலர்+அடி .

2. பிரித்து எழுதுக

உள்ளகம் ; அகங்களித்து ; கடலெனும் .

NOT TO BE REPUBLISHED @KTBS

II. அறவுரை

1. திருக்குறள்

அறன் வலியுறுத்தல்

1. அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு .

2. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல் .

3. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற .

4 அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம் .

5. அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல .

மக்கட் பேறு

1. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

2. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு .

3. குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் .

4. ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் .

5. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல் .

© KTBS NOT TO BE REPUBLISHED

காலம் அறிதல்

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
   வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
   தீராமை ஆர்க்கும் கயிறு .

3. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
   கருதி இடத்தாற் செயின் .

4. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
   செய்தற் கரிய செயல் .

5. கொக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன்
   குத்தொக்கச் சீர்த்த விடத்து .

உழவு

1. சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
   உழந்தும் உழவே தலை .

2. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
   தொழுதுண்டு பின்செல் பவர் .

3. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
   கைசெய்தூண் மாலை யவர் .

4. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
   நீரினும் நன்றதன் காப்பு .

5. இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
   நிலமென்னும் நல்லாள் நகும் .

- திருவள்ளுவர்

நூல்குறிப்பு :

தமிழர்தம் திருமறை, 'உலகப் பொதுமறை' என்று போற்றப்படும் நூல் திருக்குறள். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அறத்துப்பால், பொருட்பால்,இன்பத்துப்பால் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது .இந்நூல் மொத்தம் 1330 குறட்பாக்களைக் கொண்டது .

© KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர்குறிப்பு :

திருக்குறள் என்னும் தலைமையான அறநூலினை இயற்றியவர் திருவள்ளுவர். இவரது வாழ்வியல் கருத்துகள் எந்தக் காலத்திற்கும் ஏற்புடையதாக இருப்பதால் தெய்வப் புலவர்,பொய்யா மொழிப் புலவர் எனப் போற்றப்படுகிறார்.இவரது காலம் கி.மு.முதல் நூற்றாண்டென்பர் .

அருஞ்சொற்பொருள் :

ஆக்கம்-செல்வம் ; ஒல்லும்-இயலும் ; ஒவாது-இடைவிடாது ; மாசு-குற்றம் ; கூழ்-உணவு ; மெய்-உடல் ; நோன்பு-தவம் ; கூகை-கோட்டான் ;எய்தல்-பெறுதல் ; சீர்த்தல்-வாய்த்தல் ; இரவு-பிச்சை ; கரத்தல்-மறைத்தல் .

கருத்துரை

அறன் வலியுறுத்தல்

1. அறம் செய்வதைவிடச் சிறந்த செல்வமும் இல்லை ; அதனை மறப்பதைவிடக் கொடிய கேடும் இல்லை .
2. அறச்செயலைத் தம்மால் முடிந்த வகையில் இடைவிடாது செய்யமுடிகின்ற இடங்களிலெல்லாம் செய்தல் வேண்டும் .
3. மனத்தின்கண் குற்றம் இல்லாது இருத்தலே அறமாகும் ; மனத்தில் குற்றம் உடையவனாய்ச் செய்கின்ற யாவும் ஆரவாரத்தின் பாற்பட்டன .
4. பொறாமை, பேராசை, கடுங்கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கினையும் நீக்கிச் செய்கின்ற செயலே அறமாகும் .
5. அறநெறியில் பெறும் இன்பமே இன்பம் ; அறமல்லாப் பிற வழியில் பெறுவது துன்பமாகும்; புகழும் உண்டாகாது .

மக்கட் பேறு

1. தம் மக்களின் சிறு கைகளால் துழாவப்பட்ட உணவு சுவைமிக்க அமிழ்தத்தினும் மிக இனிமையுடையது .
2. குழந்தைகள் உடலைத் தீண்டுதல் உடலுக்கு இன்பம் தரும்; அவர்களின் மழலைச்சொல் செவிக்கு இன்பம் தரும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

3. தம் மக்களுடைய மழலைச் சொல்லைக் கேளாதவர்களே குழலிசையும் யாழிசையும் இனிமையானவை என்பர் .

4. தன் மகனைச் சான்றோன் எனப்பிறர் சொல்லக் கேட்ட தாய்,தான் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் மிகுதியாக மகிழ்வாள் .

5. மகன் தன் தந்தைக்குச் செய்யும் உதவியாவது "இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தானோ" என்று பிறர் பேசும்படிச் செய்வதாம்.

காலம் அறிதல்

1. தன்னைவிட வலிமையுடைய கூகையைக் காகம் பகற்பொழுதில் வெற்றிகொள்ளும்; அதுபோல பகைவரை வெல்லக் கருதும் அரசன் தக்க காலம் அறிந்து போர் செய்ய வேண்டும் .

2. காலத்தோடு பொருந்தி நடத்தலே, செல்வத்தைத் தம்மை விட்டு நீங்காமல் கட்டும் கயிறாகச் செயல்படும் .

3. செய்யும் செயலை அதற்குரிய காலத்தோடு இடத்தினையும் அறிந்து பொருந்தச் செய்தால் உலகம் முழுவதையும் அடையக் கருதினாலும் அது நிறைவேறும் .

4. பெற முடியாதது வந்து சேருமானால், அதனையே துணையாகக் கொண்டு அச்சமயத்திலேயே செய்வதற்கரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும்.

5. மீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கு போல காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும்; தமக்குக்காலம் பொருந்திய விடத்து எதிர்பார்த்த மீன் வந்தபொழுது கொக்கு கொத்துவது போல தப்பாமல் செய்ய வேண்டும் .

உழவு

1. உலகம் தானே சுற்றினாலும் அது உழவுத்தொழிலின் பின்னேதான் சுற்றும்; அதனால் எத்தகைய வருத்தம் அடைந்தாலும் உழவே தலையாய தொழில் ஆகும்.

2. மற்றவர்கள் உண்ணும் உணவை உழுது கொடுத்துத் தாமும் உண்டு வாழ்பவரே வாழ்பவர் எனப்படுவார்.மற்றவரெல்லாம் அவரைத் தொழுது உண்டு அவர்பின் செல்பவர் ஆவார் .

NOT TO BE REPUBLISHED @KTBS

3. தம் கையால் உழுது உண்பதை இயல்பாகக் கொண்டவர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார் ; ஆனால் தம்மிடம் வந்து இரப்பார்க்கு ஒளிக்காமல் எதனையும் கொடுப்பார் .

4. பயிரிட உழுதபிறகு உழுததைவிட எருவிடுவது நல்லது ; களையெடுத்த பின்னர் நீர் பாய்ச்சுதலைவிட பயிரினைப் பாதுகாப்பது நல்லது .

5. 'எம்மிடத்தில் எதுவுமில்லை' என்று சோம்பி இருப்பாரைக் கண்டு நிலமகள் என்று சொல்லப்படுகின்ற நங்கை சிரிப்பாள் .

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. காக்கை பகலில் இதனை வெல்லும்____________

   அ) கிளியை ஆ) கொக்கை

   இ) கூகையை ஈ) குருவியை .

2. வாய்ப்பு கிடைக்கும் போது இதைப்போல் செயல்படவேண்டும் ______________

   அ) காக்கை போல் ஆ) குருவியைப் போல்

   இ) கொக்கு போல் ஈ) நாய் போல் .

3. ஏரோட்டுவதைவிடச் சிறந்தது இது____________

   அ) விதைத்தல் ஆ) எருவிடுதல்

   இ) களைஎடுத்தல் ஈ) கதிர் அறுத்தல் .

II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. மனத்தில் குற்றம் இல்லாமல் இருப்பது________

2. அறத்தான் வருவதே _________

3. மக்கள் மெய்தீண்டல் உடலுக்கு _________

4. மகனைச் சான்றோன் எனக்கேட்டபோது மனம் மகிழ்பவர் ___________

III. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும் ?
2. தம் மக்களது கைப்பட்ட உணவு எப்படிப்பட்டது ?
3. செல்வத்தைத் தம்மிடத்திலேயே கட்டிப் போட்டிருக்கும் கயிறு யாது?
4. காலத்தோடு செயல் செய்தால் கைகூடுவது என்ன ?
5. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

IV. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக;

1. புகழையும் இன்பத்தையும் தரவல்லது எது என்கிறார் வள்ளுவர்?
2. உடலுக்கும் செவிக்கும் இன்பத்தைத் தரவல்லவை எவை ?
3. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

V. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. வள்ளுவர் எவ்வெவற்றை அறம் என்று சொல்லுகிறார் ?
2. உழவுத் தொழிலின் உயர்வையும் உழவர்களின் உயர்வையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

VI. பத்து வரியளவில் விடை எழுதுக :

1. வள்ளுவர் அறத்தை வலியுறுத்துவதை விளக்கி வரைக .
2. மக்கட்பேற்றைப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக .
3. காலம் அறிதல் பற்றி வள்ளுவர் தரும் விளக்கம் யாது ?
4. உழவின் மேன்மையைப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக .

VII. இடம்சுட்டிப் பொருள் விளக்குக:

1. " அறத்தான் வருவதே இன்பம் "
2. " ஞாலம் கருதினும் கைகூடும் "

NOT TO BE REPUBLISHED @KTBS

மொழிப் பயிற்சி :

1. **பிரித்து எழுதுக :** மாசிலன் ; இடத்தாற்செயின் ;
2. **சேர்த்து எழுதுக :** அனைத்து + அறன் ; குழல்+இனிது ; தொழுது+உண்டு .
3. **எதிர்ச்சொல் தருக :** மறத்தல் ; இரப்பார் ; கரப்பார் .

செயல்திறன்:

1. எடுத்துக்காட்டில் உள்ளதுபோன்று அசைபிரித்து சீரையும் தளையையும் குறிப்பிடுக ;

(எ.டு) உழுதுண்டு வாழ்வாரே

உழு + துண் + டு

நிரை+ நேர் + நேர்→ புளி மாங்காய்

வாழ் + வா + ரே

நேர் + நேர் + நேர் → தேமாங்காய்

1. காய் முன் நேர் வந்திருப்பதனால் இது வெண்சீர் வெண்டளை .

2. வான்சிறப்பைப் பற்றி வள்ளுவர் எழுதியுள்ள குறள்களில் ஐந்தினை எழுதிப் படிக்கவும் .

NOT TO BE REPUBLISHED @KTBS

2. திரிகடுகம்

அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

சான்றோர் நலம்

1. இல்லார்க்கொன் றீயும் உடைமையும் இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள .

புதரில் விதைத்த விதை

2. முறை செய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் - நிறை ஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவை மூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து .

- நல்லாதனார்

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

திரிகடுகம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது. சுக்கு , மிளகு , திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம். இம்மருந்தை உண்டால் நோய் நீங்கும். இதைப் போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம் பெற்றுள்ள மூன்று கருத்துகளும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை அளிக்கும் .

ஆசிரியர் குறிப்பு :

திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரினர் என்பர். இவரைச் செரு அடுதோள் நல்லாதன் எனப்பாயிரம் குறிப்பிடுவதால் இவர் போர் வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது . ***காலம் 2ம் நூற்றண்டு.***

நூல்பயன் :

திரிகடுகம் பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்துகள் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின் மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் திகழச் செய்யும் .

அருஞ்சொற் பொருள் :

ஈயும்-அளிக்கும் ; நில்லாமை-நிலையாமை ; நெறி-வழி ; தூய்மை-தூய தன்மை ; மாந்தர்-மக்கள் ; நிறை ஒழுக்கம்-மேலான ஒழுக்கம் ; தேற்றாதான்-கடைப்பிடிக்காதவன் ; வனப்பு-அழகு ; தூறு-புதர் ; வித்து-விதை .

கருத்துரை :

1. வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு .

2. அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதை போன்று பயனற்றவையே .

© KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :

1. திரிகடுகத்தின் ஆசிரியர் யார் ?
2. திரிகடுகம் என்பதன் பொருள் யாது ?
3. ‘தூறு ’ என்றால் என்ன ?

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக :

1. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?
2. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

III. இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக :

1. இம்மூன்றும் நன்றறியும் மாந்தர்க்குள
2. இவை மூன்றும் தூற்றின்கண் தூவிய வித்து .

III. தொடர் நிலைச்செய்யுள்

கம்ப ராமாயணம்

சுந்தர காண்டம்

திருவடி தொழுத படலம்

(பிராட்டியைக் கண்டதை அனுமன் இராமபிரானிடம் கூறுதல்)

1. கண்டனென், கற்பினுக்கு அணியை, கண்களால்,
தெண் திரை அலைகடல் இலங்கைத் தென் நகர்;
அண்டர் நாயக! இனி, துறத்தி, ஐயமும்
பண்டு உள துயரும் என்று அனுமன் பன்னுவான்; *1*

அறுசீர் ஆசிரிய விருத்தம்

2. உன் பெருந் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன் பெரு மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலைமன்னன்-
தன் பெருந் தனயை என்னும் தகைமைக்கும், தலைமை சான்றாள்-
என் பெருந்தெய்வம்! ஐயா ! இன்னமும் கேட்டி ' என்பான்; *2*

3. பொன்அலது இல்லை பொன்னைஒப்பு என, பொறையில் நின்றாள்,
தன் அலது இல்லைத் தன்னை ஒப்பு என; தனக்கு வந்த
நின் அலது இல்லை நின்னை ஒப்பு என, நினக்கு நேர்ந்தாள்;
என் அலது இல்லை என்னை ஒப்பு என, எனக்கும் ஈந்தாள். *3*

4. உன் குலம் உன்னது ஆக்கி, உயர் புகழ்க்கு ஒருத்தி ஆய
தன் குலம் தன்னது ஆக்கி, தன்னை இத் தனிமை செய்தான்
வன் குலம் கூற்றுக்கு ஈந்து, வானவர் குலத்தை வாழ்வித்து,
என்குலம் எனக்குத் தந்தாள்; என் இனிச் செய்வது, எம் மோய்? *4*

5. விற் பெருந் தடந் தோள் வீர! வீங்கு நீர் இலங்கைவெற்பில்
நற் பெருந்தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற் பிறப்பு என்பது ஒன்றும், இரும் பொறை என்பது ஒன்றும்,
கற்பு எனும் பெயரது ஒன்றும், களி நடம் புரியக் கண்டேன். *5*

6. வேலையுள் இலங்கை என்னும் விரி நகர் ஒருசார், விண் தோய்,
காலையும்மாலைதானும் இல்லது ஓர் கனகக் கற்பச்
சோலை அங்கு அதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள்-ஐய! தவம் செய்த தவம் ஆம் தையல். *6*

©KTBS NOT TO BE REPUBLISHED

7. மண்ணொடும் கொண்டு போனான்-வான் உயர் கற்பினாள்தன்
புண்ணிய மேனிதீண்ட அஞ்சுவான், உலகம் பூத்த
கண் அகன்கமலத்து அண்ணல், ''கருத்திலாள் தொடுதல் கண்ணின்,
எண் அருங் கூறாய்மாய்தி'' என்றது ஓர் மொழி உண்டு என்பார். 7

8. தீண்டிலன் என்னும் வாய்மை-திசைமுகன் செய்து முட்டை
கீண்டிலது; அனந்தன் உச்சி கிழிந்திலது; எழுந்து வேலை
மீண்டில; சுடர்கள் யாவும் விழுந்தில; வேதம் செய்கை
மாண்டிலது; என்னும் தன்மை வாய்மையால், உணர்தி மன்னோ! 8

9. சோகத்தாள் ஆய நங்கை கற்பினால், தொழுதற்கு ஒத்த
மாகத்தார் தேவிமாரும், வான் சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள், இப்போது ஈசன் மகுடத்தாள்; பதுமத்தாளும்,
ஆகத்தாள் அல்லள், மாயன் ஆயிரம் மௌலி மேலாள். 9

10. இலங்கையை முழுதும் நாடி இராவணன் இருக்கை எய்தி,
பொலங் குழையவரை எல்லாம் பொதுவுற நோக்கிப்போந்தேன்,
அலங்கு தண்சோலை புக்கேன்; அவ்வழி, அணங்கு அன்னாளை,
கலங்கு தெண்திரையிற்று ஆய கண்ணின் நீர்க் கடலில், கண்டேன். 10

11. அரக்கியர் அளவு அற்றார்கள், அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர்காப்ப, நின்பால் நேயமே அச்சம் நீக்க,
இரக்கம் என்ற ஒன்று தானே ஏந்திழை வடிவம் எய்தி,
தருக்கு உயர்சிறை உற்றன்ன தகையள், அத் தமியள்-அம்மா! 11

12. தையலை வணங்கற்கு ஒத்த இடை பெரும் தன்மை நோக்கி,
ஐய! யான் இருந்த காலை, அலங்கல் வேல் இலங்கை வேந்தன்
எய்தினன்; இரந்து கூறி இறைஞ்சினன்; இருந்து நங்கை
வெய்து உறைசொல்ல, சீறி, கோறல் மேற்கொண்டு விட்டான். 12

13. ஆயிடை, அணங்கின் கற்பும், ஐய! நின் அருளும்செய்ய
தூய நல் அறனும் என்று, இங்கு இனையன தொடர்ந்து காப்ப,
போயினன், அரக்கமாரை, ''சொல்லுமின் பொதுவின்'' என்று, ஆங்கு
ஏயினன்; அவர் எலாம் என் மந்திரத்து உறங்கியிற்றார். 13

©KTBS NOT TO BE REPUBLISHED

14. அன்னது ஓர் பொழுதில் நங்கை ஆர் உயிர் துறப்பதாக
உன்னினள்; கொடி ஒன்று ஏந்தி, கொம்பொடும் உறைப்பச் சுற்றி,
தன் மணிக்கழுத்தில் சார்த்தும் அளவையில் தடுத்து, தாயேன்,
பொன் அடி வணங்கி நின்று, நின் பெயர் புகன்ற போழ்தில், 14

15. வஞ்சனை அரக்கர் செய்கை இது'' என மனக்கொண்டேயும்,
அஞ்சன வண்ணத்தான்தன் பெயர் உரைத்து, அளியை, என்பால்
துஞ்சுறு பொழுதில் தந்தாய் துறக்கம்'' என்று உவந்து சொன்னாள்-
மஞ்சு என, வனமென் கொங்கை வழிகின்ற மழைக் கண் நீராள். 15

ஆழி பெற்ற பிராட்டி நிலை

16. அறிவுறத்தெரியச் சொன்ன, பேர் அடையாளம்யாவும்,
செறிவுறநோக்கி, நாயேன் சிந்தையில் திருக்கம் இன்மை
முறிவு அற எண்ணி, வண்ண மோதிரம் காட்ட, கண்டாள்;
இறுதியின் உயிர்தந்து ஈயும் மருந்து ஒத்தது, அனையது-எந்தாய்! 16

17. வாங்கிய ஆழிதன்னை, ''வஞ்சர் ஊர் வந்ததாம்'' என்று
ஆங்கு உயர்மழைக் கண் நீரால் ஆயிரம் கலசம் ஆட்டி,
ஏங்கினள் இருந்தது அல்லால், இயம்பலள்; எய்த்த மேனி
வீங்கினள்; வியந்தது அல்லால், இமைத்திலள்; உயிர்ப்பு விண்டாள். 17

18. அன்னவர்க்கு, அடியனேன், நிற் பிரிந்த பின் அடுத்த எல்லாம்
சொல் முறை அறியச் சொல்லி, ''தோகை! நீ இருந்த சூழல்
இன்னது என்று அறிகிலாமே, இத்தனை தாழ்த்தது'' என்றே,
மன்ன! நின்வருத்தப்பாடும் உணர்த்தினன்; உயிர்ப்பு வந்தாள். 18

19. இங்கு உளதன்மை எல்லாம் இயைபுளி இயையக் கேட்டாள்;
அங்கு உள தன்மை எல்லாம் அடியனேற்கு அறியச் சொன்னாள்;
''திங்கள் ஒன்று இருப்பென் இன்னே; திரு உளம் தீர்ந்தபின்னை,
மங்குவென் உயிரோடு'' என்று, உன் மலரடி சென்னி வைத்தாள். 19

@KTBS NOT TO BE REPUBLISHED

சீதாபிராட்டி தந்த சூடாமணியை அனுமன் இராமனிடம் சேர்த்தல்.

20. வைத்தபின், துகிலின் வைத்த மா மணிக்கு அரசை வாங்கி,
கைத்தலத்து இனிதின் ஈந்தாள்; தாமரைக் கண்கள் ஆர,
வித்தக! காண்டி!' என்று கொடுத்தனன்-வேத நல் நூல்
உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஒக்க நிற்பான். 20

நூல்குறிப்பு :

தமிழுக்கு 'கதி' என்று போற்றப்படும் இரண்டு நூல்கள் கம்பராமாயணம், திருக்குறள் என்பன. இவற்றுள் கம்பராமாயணம் கம்பரால் இயற்றப்பட்ட இராமனது வரலாறாகும். இராமாயணம் வடமொழியில் வால்மீகி என்ற முனிவரால் முதன்முதல் இயற்றப்பட்டது. இந்நூல் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளைக் கொண்டது .

ஆசிரியர் குறிப்பு :

கம்பராமயணத்தின் ஆசிரியர் கம்பர் . 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் ' என்னும் கூற்றுகள் கம்பரின் பெருமையைப் பறைசாற்றும். கம்பர் சோழநாட்டில் திருவழுந்தூரில் தோன்றினார். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் காலம் கி. பி. 12 –ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர் .

அருஞ்சொற் பொருள்

1. தெண்திரை - தெளிந்த அலை ; அண்டர் - தேவர் ; துற - நீக்கு. 3. பொறை - பொறுமை ; 4. கூற்று - எமன் ; 5. தடம் - பெருமை ; 6. வேலை - கடல் ; 7. கமலம் - தாமரை ; 8. அனந்தன்-ஆதிசேடன் ; சுடர்கள் - சூரியனும் சந்திரனும் ; 9. பதுமம் - செந்தாமரை ; 10. பொலன் -பொன் ; குழை - தோடு ; அணங்கு - பெண் தெய்வம் ; 11. அலகை - பேய்; நேயம் - அன்பு ; 12. தையல் - பெண் ; அலங்கல் - மாலை ; இறைஞ்சுதல் - வேண்டுதல் ; வெய்துரை - கடுஞ்சொல் ;

கோறல் - கொல்லுதல் ; 13. ஏயினன் - சென்றான் ; 15. துறக்கம் - வீடுபேறு,முத்தி ; 16. திருக்கம் - வஞ்சகம் ; 17. ஆழி - மோதிரம் ; இயம்புதல் - சொல்லுதல் ; 19. மங்குதல் - மடிதல் ; சென்னி - தலை .

NOT TO BE REPUBLISHED @KTBS

கருத்துரை :

1. அனுமான் இராமனைப் பார்த்து " இராமனே! கடலால் சூழப்பட்ட இலங்கை நகரில், கற்புக்கு அணிகலனாக இருக்கும் சீதையைக் கண்களால் கண்டேன் . இனி உனது துயரத்தை நீக்குவாயாக " என்று கூறி சீதையைக் கண்ட விதத்தை விளக்கினான் .

2. ஐயனே! உன்னுடைய மனைவி என்னும் உரிமைக்கும் தசரதச் சக்கரவர்த்தியின் மருமகள் என்னும் உண்மைக்கும், மிதிலை அரசன் சனகனுடைய மகள் என்னும் பண்புக்கும் ஏற்ற சிறப்புக்களைப் பெற்று எனது சிறப்புடைய தெய்வமாகச் சீதை திகழ்கின்றாள் !

3. பொன்னுக்கு இணை பொன்னே என்று கூறும்படி தனக்கு ஒப்பு தானேயாகி பொறுமையில் தலைசிறந்து நின்றாள் சீதை. "தனக்குக் கணவனாய் வந்த உனக்கு ஒப்பு நீயே அல்லாமல் வேறு யாரும் இல்லை என்னும் சிறப்பை உமக்குக் கொடுத்தாள் ; எனக்கு ஒப்பு நானே ஆவேன்" என்னும் சிறப்பை எனக்கும் கொடுத்தாள் .

4. எமது தாயாகிய சீதை, உனது குலம் உன் புகழால் சிறப்புப் பெறுமாறு செய்தாள். உயர்ந்த புகழை உடையவள் தான் ஒருத்தியே என்னும் சிறப்பைப் பெற்று தான் பிறந்த குலத்தைத் தன்னால் சிறப்புப் பெறச் செய்தாள். தன்னைப் பிரித்துத் தனித்து வருந்தும்படி செய்த இராவணனது கொடிய குலத்தைக் கூற்றுவனுக்குக் கொடுத்தாள் . அதன் மூலம் தேவர்கள் குலம் நல்வாழ்வு பெறச் செய்தாள். எனது வானர குலத்தை எவரும் புகழும் சிறப்பைக் கொடுத்தாள். இவற்றைவிட இனி அவள் செய்யத்தக்கது வேறு என்ன இருக்கிறது ?

5. வில்லைத் தோளில் ஏந்தியுள்ள வீரனே! கடல் சூழப்பெற்றதும், திரிகூடமலைமேல் திகழ்வதுமான இலங்கையில் கற்பு என்னும் தவத்தை மேற்கொண்ட சீதையை நான் காணவில்லை. பின் வேறென்ன கண்டேன் என்றால்,' உயர்ந்த குடிப்பிறப்பு என்னும் ஒன்றும், கற்பு என்னும் பெயரைப் பெற்ற ஒன்றும், அங்கே ஒன்று சேர்ந்து களிப்போடு நடனமாடக் கண்டேன்! ' .

6. ஐயனே! தவத்தின் பயனாய் விளங்கும் பெண்ணாகிய சீதை, கடலுக்கு நடுவே திகழும் இலங்கை என்னும் நகரத்தின் ஒரு புறத்தே, வானளாவ உயர்ந்ததும், காலை மாலை என்னும் வேறுபாடு தெரியாதபடி எப்போதும் ஒளிமயமாகத் திகழ்வதுமான ஒரு பொன்மயமான கற்பகச் சோலையின் உள்ளே உன் தம்பி இலக்குமணன் புல்லைக் கொண்டு வேய்ந்து அமைத்த தூயதான பர்ணசாலையில் வீற்றிருந்தாள் .

NOT TO BE REPUBLISHED ©KTBS

7. உலகத்தைப் படைத்த பிரமன், இராவணனை நோக்கி 'உன்னை விரும்பாத ஒருத்தியை நீ வலிந்து தீண்டினால் சுக்கு நூறாகத் தலைவெடித்துச் சிதறி இறப்பாய்!' என்று சாபமிட்டான். அதை நினைத்து, இராவணன் கற்புடைய சீதையின் திருமேனியைத் தீண்ட அஞ்சி, அவள் இருந்த நிலத்தோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு போனான் .

8. சீதையை இராவணன் தீண்டவில்லை என்னும் உண்மையை, "பிரமன்படைத்த இந்த அண்டகோளம் வெடிக்கவில்லை; ஆதிசேடனின் ஆயிரம் தலைபெற்ற படம் கிழிந்து போகவில்லை; கடல்கள் கரையைக் கடந்து பொங்கி உலகை அழிக்கவில்லை; சூரியன், சந்திரன் முதலிய கிரகங்கள் கீழே விழவில்லை; வேதமும்,வேதியர்கள் கூறும் விதிகளும் அழியவில்லை" - என்னும் இத்தன்மைகளின் உண்மையால் நீ உணர்ந்து கொள்வாயாக .

9. உன்னைப் பிரிந்த துன்பத்தை உடையவளான சீதை கற்பின் சிறப்பினால் வானத்தில் உள்ள தேவர்களின் மனைவியர்கள் தொழுவதற்குரிய பெருமையை அடைந்தாள், சீதையின் கற்பினால், சிவனின் இடப்புறத்தில் இருந்த உமாதேவி இப்போது தலைமேல் இருக்கும் சிறப்புப் பெற்றாள். செந்தாமரையில் வசிக்கும் திருமகளும் திருமாலின் மார்பில் இல்லாமல் அவனது ஆயிரம் திருமுடிகளின் மேல் இருக்கத் தக்கவளானாள் .

10. நான் இலங்கை நகர் முழுவதும் தேடிப் பார்த்து விட்டு, இராவணனது அரண்மனையை அடைந்து பெண்களையெல்லாம் பொதுவாகப் பார்த்துக்கொண்டே சென்று, குளிர்ந்த அசோக வனத்தில் நுழைந்தேன். அச்சோலையில் தேவமகள் போன்ற சீதையை, அலையும் அலைகளை உடைய கண்ணீர் ஆகிய கடலின் இடையே கண்டேன் .

11. பேய்களின் கூட்டமும் கண்டு அஞ்சும்படி அளவற்ற அரக்கியர் சீதையை நெருக்கிக் காத்தனர். அதனால் தோன்றிய அச்சத்தை உன்பால் கொண்ட அன்பால் போக்கித் தனித்திருந்த சீதை, ' இரக்கம் என்னும் ஒரு பண்பு பெண்ணின் வடிவம் பெற்று கொடுமை மிக்க சிறைக்குள்ளே சிக்கிக் கொண்டதைப் போன்ற' தன்மையைப் பெற்றவளாய் இருந்தாள் .

12. ஐயனே !சீதையைக் கண்டு வணங்குவதற்குத் தகுதியான நேரத்தை எதிர்பார்த்து நான் காத்திருந்தேன், அப்போது மாலை சூடிய, வேலை ஏந்திய இராவணன் அங்கு வந்து சீதையைத் தன்னிடம் காதல் கொள்ளுமாறு வேண்டி வணங்கினான். அவனிடம் சீதை கடுஞ்சொற்களைக் கூறினாள். அதைக் கேட்டுக் கோபம் கொண்ட அவன் சீதையைக் கொல்ல முற்பட்டான்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

13. ஐயனே! அப்போது சீதையின் கற்பும், உனது அருளும்,நல்ல அறமும் என்னும் இவையாவும் தொடர்ந்து அவளைக் காப்பாற்ற, இராவணன் அரக்கியரை நோக்கி, ‘ நீங்கள் போய் சீதைக்குப் புத்தி கூறுங்கள் ’ என்று அனுப்பிவிட்டு வெளியேறினான்,அந்த அரக்கியர் அனைவரும் என் மந்திர வலிமையால் தூங்கினார்கள்.

14. அந்த நேரத்தில் சீதை தனது அரிய உயிரை விட்டு விட நினைத்தாள். ஒரு கொடியை எடுத்து, அதை ஒரு மரக்கிளையில் இறுகக் கட்டி அதன் மறுமுனையைத் தனது அழகிய கழுத்தில் சுருக்கிட்டுக்கொள்ளும் நேரத்தில் நாய் போன்ற நான் அச்செயலைத் தடுத்து, அவள் திருவடிகளை வணங்கி உன் திருப்பெயரைக் கூறினேன். அவ்வாறு கூறியதும்.

15. மேகத்திலிருந்து பெய்யும் மழையைப் போலப் பெருகிவழியும் கண்ணீரை உடையவளான சீதை, எனது செயல் வஞ்சக அரக்கரது மாயச் செய்கை என்று ஐயுற்றாலும், என்னைப் பார்த்து, ‘ என்பால் நீ அருளுடையவன்; நான் இறக்கும் சமயத்தில் மை போன்ற நிறம் பெற்ற இராமனின் பெயரைச் சொல்லி, நான் பெற இருந்த மரணத்தைத் துறக்குமாறு செய்தாய் ’ என்று உவகையோடு உரைத்தாள்.

16. என் தந்தை போன்றவனே! நான் சொன்ன அடையாளங்கள் அனைத்தையும் தன் அறிவினால் ஆராய்ந்து தெளிந்து, எனது மனத்தில் வஞ்சகம் இல்லை என்பதை அறிந்த சீதையிடம் நான் உனது அழகிய மோதிரத்தைக் காட்ட, அதனை உற்றுப் பார்த்தாள். அந்த மோதிரம் மரணம் நேருங்காலத்தில் உயிரை நிலைநிறுத்திக் காக்கும் சஞ்சீவினி என்னும் மருந்தைப் போன்றது .

17. சீதை தான் பெற்ற அந்த மோதிரம் வஞ்சகர்களான அரக்கர்களது ஊருக்கு வந்து புனிதம் இழந்தது என்று அப்பொழுதே ஆனந்தக் கண்ணீரால் முழுக்காட்டி ஏங்கிச் செயலற்று இருந்தாளே தவிர ஒரு சொல்லும் சொல்லவில்லை; இளைத்திருந்த உடல் பூரித்தாள்; தனக்குள்ளேயே வியப்படைந்தாள் ; ஆனாலும் மோதிரத்தைக் கண்ட கண்கள் இமைக்கவில்லை; பெருமூச்சு விட்டாள் .

18. மன்னனே! நான் சீதையிடம், அவள் உன்னைப் பிரிந்த பின்பு நடந்த செய்திகள் அனைத்தையும் சொல்ல வேண்டிய முறையில் சொல்லி, ‘ நீ இருந்த இடம் இவ்விடத்தில் உள்ளது என்பது தெரியாமையால்தான் இவ்வளவு காலம் தாமதமானது ’ என்றும் கூறி, அவளைப் பிரிந்து நீ வருந்தும் தன்மையினையும் எடுத்துச் சொன்னேன். அதன் பின்னரே (போன உயிர் திரும்பியது போல) மூச்சுவிட்டாள் .

©KTBS NOT TO BE REPUBLISHED

19. இவ்விடத்தில் உள்ள நிலைமைகளை நான் சொல்லக் கேட்டாள். அவ்விடத்தில் உள்ள நிலைமைகளை நன்கு அறியும்படி எனக்குக் கூறினாள். பின்னர், "இன்னும் ஒரு மாதம் இங்கு உயிரோடு இருப்பேன்; அந்த ஒரு மாதத்திற்குள் சக்ரவர்த்தித் திருமகன் வந்து அழைத்துச் செல்லவில்லை யென்றால் ஒரு மாதம் சென்ற பிறகு நான் உயிர் இழப்பேன் என்பது திண்ணம்" என்று உன் திருவடிகளைத் தன் தலைமேல் வைத்து வணங்கிச் சொன்னாள் .

20. பின்னர் தனது ஆடையில் முடிந்து வைத்திருந்த, இரத்தினங்களுக்கெல்லாம் தலைமை பெற்றுச் சிறந்த சூளாமணியை எடுத்து எனது கையில் உவகையோடு கொடுத்தாள். "அறிவில் சிறந்தவனே! அதனை உன் கண்களால் காண்பாயாக" என்று கூறி, எல்லாக்காலங்களிலும் புகழோடு திகழ்பவனான அனுமான் சூளாமணியை இராமனிடம் கொடுத்தான் .

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. இராமனின் தந்தை ______

   அ) அனுமன்,　　ஆ) தசரதன்,

   இ) இராவணன்,　　ஈ) சுக்ரீவன் .

2. மிதிலையின் அரசன் ______

   அ) சனகன்,　　ஆ) இராமன்,

   இ) தசரதன்,　　ஈ) இலக்குவன் .

3. உலகத்தைப் படைத்தவன் ______

   அ) திருமால்,　　ஆ) பிரமன்,

   இ) முருகன்,　　ஈ) பிள்ளையார் .

4. சீதை அனுமானிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் ____

   அ) சிலம்பு,　　ஆ) சூளாமணி,

   இ) மோதிரம்,　　ஈ) வளையல் .

II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. கம்பராமாயணத்தின் ஆசிரியர் ________ .
2. புல்லால் பர்ணசாலையை அமைத்தவன் _______ .
3. சீதையை நிலத்தோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு சென்றவன் _________ .
4. ஆதிசேடனுக்கு ________ தலைகள் உள்ளன .

III. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. சீதையைக் கண்டதாக இராமனிடம் அறிவித்தது யார் ?
2. சீதை அனுமானிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

IV. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :

1. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது ?
2. கற்பின் சிறப்பினால் சீதை பெற்ற பெருமை யாது ?
3. அரக்கியர் சூழ இருந்த சீதையின் நிலையைக் கம்பர் எவ்வாறு வருணிக்கின்றார் ?
4. இராவணன் சீதையைக் கொல்ல முற்பட்டபோது அவளைக் காப்பாற்றியவை எவை ?

V. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. அசோகவனத்தில் சீதை இருந்த நிலையை அனுமான் எவ்வாறு விளக்கினான் ?
2. இராவணன் சீதையைத் தீண்டவில்லை என்னும் உண்மையை அனுமன் எவற்றைக் கொண்டு உறுதிப்படுத்தினான் ?
3. அனுமன் இராமன் பெயரைச் சொன்னதும் சீதை கூறிய மொழிகள் யாவை ?
4. அனுமன் கையிலிருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது ?

©KTBS NOT TO BE REPUBLISHED

VI. பத்து வரிகளில் விடை எழுதுக :

1. எல்லா குலங்களையும் சீர்மையடையச் செய்தவள் சீதை என்பதை அனுமான் எவ்வாறு விவரிக்கின்றான் ?
2. இலங்கையில் சீதை இருந்த நிலை பற்றி அனுமான் கூறியவற்றை எழுதுக ?
3. அனுமான் சீதையிடம் இராமனின் மோதிரத்தை அளித்துக் கூறியவை யாவை ? அதற்கு சீதை அளித்த மறுமொழி யாது ?

VII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

1. " கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால் "
2. " என்னலது இல்லை என்னை ஒப்புஎன எனக்கும் ஈந்தாள் "
3. " இற்பிறப் பென்ப தொன்று மிரும்பொறையென்ப - தொன்றுங்
   கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் - கண்டேன் "
4. " திங்களொன் றிருப்பெ னின்னும் திருவுளம் தீர்ந்த பின்னை, மங்குவெ னுயிரொடு ".

@KTBS NOT TO BE REPUBLISHED

மொழிப்பயிற்சி :

1. சேர்த்தெழுதுக :

   தெற்கு + நகர் ; பெருமை + தெய்வம் ; தடம் + தோள் ; இல் + பிறப்பு.

2. பிரித்தெழுதுக :

   கிழிந்திலது ; தண்சோலை ; உயிரோடென்று .

3. எதிர்ச்சொல் தருக :

   தென்னகர் : பெருமை ; புண்ணியம் .

4. இணைச்சொல் தருக :

   நரை ; சீரும் ; பேரும் ; கண்ணும் .

செயல்திறன் :

1. எடுத்துக்காட்டைப் போன்று நெடிலுக்கு இணையான குறிலெழுத்தைப் பயன்படுத்திப் பொருள் வேறுபாட்டை எழுதுக :

(எ-டு) வேல் - வேலாயுதம் . வெல் - வெற்றிகொள் .

கோள் -

மாடு -

பால் -

2. கீழ்வரும் வாக்கியங்களைக் கேட்டுள்ளவாறு மாற்றுக :

1. அனுமன் சீதையைக் கண்டான் (எதிர்மறை வாக்கியமாக)
2. இராமன் போர் செய்தான் (பிறவினை வாக்கியமாக)
3. சீதை அசோகவனத்தில் இருந்தாள் (வினா வாக்கியமாக)
4. ஆ ! இது நம் கணவரின் மோதிரமல்லவா ! (செய்தி வாக்கியமாக)
5. சீதையைத் தொட அஞ்சவேண்டும் (கட்டளை வாக்கியமாக)
6. சீதை சூளாமணியை அனுமானிடம் கொடுக்கவில்லை (உடன்பாட்டு வாக்கியமாக)

©KTBS NOT TO BE REPUBLISHED

IV சங்க இலக்கியம்

1. குறுந்தொகை

முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே .

-கூடலூர் கிழார்

-பாடல் எண்: 167

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

(குறுந்தொகை = குறும் + தொகை)

அகப்பொருளைக் கூறும் நானூற்றொன்று பாடல்களைக் கொண்டது. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று, இது நாலடிச் சிற்றெல்லையையும் ஒன்பதடிஎல்லையையும் உடைய அகவற்பாக்களால் ஆனதாகும். இறையனார் தருமியின் பொருட்டு எழுதியளித்த "கொங்கு தேர் வாழ்க்கை" என்று தொடங்கும் செய்யுள் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது.

அருஞ்சொற் பொருள் :

முளி - முற்றிய ; மெல் - மெல்லிய ; கழுவுறு – துடைத்தல் ; கலிங்கம் - ஆடை ; கழாஅது – துவையாமல் ; உடீஇ - உடுத்துக்கொண்டு ; கமழ - மணப்ப ; அட்ட - சமைத்த ; புளிப்பாகர் - புளிக்குழம்பு .

கருத்துரை :

முற்றிய கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவைக்காமல் உடுத்துக் கொண்டு குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மணப்ப, தானே துழாவிச் சமைத்த இனிய புளிப்பை உடைய குழம்பை, தன் தலைவன் இனிதென்று உண்பதனால் தலைவியின் முகமானது நுண்ணியதாய் மலர்ந்தது .

பயிற்சி

அ) I. கோடிட்ட இடங்களை நிரப்புக .

1) முளிதயிர் பிசைந்த ______ மெல் விரல் .

2) இனிது எனக் _______ உண்டலின்

II. ஒரு வாக்கியத்தில் விடை தருக .

1) காந்தள் மலர் போன்ற மெல்லிய விரலால் தலைவி எதனைப் பிசைந்தாள் ?

2) தலைவி என்ன சமைத்தாள் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக .

தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினையும் உணவினை உண்ட தலைவனின் உணர்வு மற்றும் தலைவியின் மகிழ்ச்சியினையும் கூடலூர்கிழார் வழி நின்று விளக்குக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக .

1) நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே .

மொழிப்பயிற்சி

1) எதிர்ச்சொல் தருக .

இனிது

மகிழ்ச்சி

2) வாக்கியத்தில் அமைத்து எழுதுக .

புகை

நுண்மை .

@KTBS NOT TO BE REPUBLISHED

v. பல்சுவை

1. மதுரை மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்

சுண்ணம் திமிர்ந்து தேன்அருவி
துளைந்து ஆடு அறுகால் தும்பி பசும்
தோட்டுக் கதவம் திறப்பமலர்த்
தோகை குடிபுக்கு ஓகை செயும்

தண்ணம் கமலக் கோயில்பல
சமைத்த மருதத் தச்சன்முழு
தாற்றுக் கமுகு நாற்றி இடும்
தடங்கா வணப்பந் தரில்வீக்கும்

விண்ணம் பொதிந்த மேகபடாம்
மிசைத்தூக் கியபன் மணிக்கொத்து
விரிந்தால் எனக்கால் நிமிர்ந்து தலை
விரியும் குலைநெல் கற்றைபல

வண்ணம் பொலியும் பண்ணைவயல்
மதுரைக்கு அரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே .

©KTBS
NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

"மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்" பிள்ளைத் தமிழ் நூல்களுள் முதன் முதல் எழுதப்பெற்ற நூல். பிள்ளைத் தமிழ். ஆண்பால் பிள்ளைத் தமிழ் எனவும் பெண்பால் பிள்ளைத் தமிழ் எனவும் இரு வகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, ஆகிய முதல் ஏழு பருவங்களும் இருவகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை .

பெண்பால் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் அம்மை, நீராடல் மற்றும் ஊசல் ஆகும். ஆண்பால் பிள்ளைத் தமிழின் இறுதி மூன்று பருவங்கள் சிறுபறை, சிற்றில் மற்றும் சிறுதேர் ஆகும் .

ஆசிரியர் குறிப்பு :

குமரகுருபரர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டத்தில் பிறந்தவர். சண்முக சிகாமணிக் கவிராயரும் சிவகாமியம்மையாரும் இவருடைய பெற்றோராவர். ஐந்தாண்டு வரை பேசாதிருந்து திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றல் பெற்று, பிறகு 'கந்தர் கலிவெண்பா' பாடினார். முருகப் பெருமான்,குமரகுருபரரின் கனவில் தோன்றி, " நீ குருபரனாகும் " எனத் திருவாய் மொழிந்ததனால் 'குமரகுருபரர்' எனப் பெயர் பெற்றார் என்பர் .

அருஞ்சொற் பொருள் :

சு ண்ணம் - மகரந்தப்பொடி ; திமிர்ந்து – தடவி ; மலர்த்தோகை - திருமகள் ; ஓகை - மகிழ்ச்சி ; நாற்றி – தொங்கக்கட்டி ; வீக்குதல் - கட்டுதல்; கமுகு - பாக்கு ; மேகப்படாம் - மேகமாகிய ஆடை .

கருத்துரை :

மகரந்தத்தைப் பூசி தேனில் கலந்து ஆடும் வண்டுகள் இதழாகிய கதவுகளைத் திறக்க செந்தாமரையில் திருமகள் மகிழ்ந்து குடி புகுந்துள்ளாள். அத்தகுபெருந்தாமரைப்பூவாகிய கோயில்கள் பல அமைத்தவன் மருதத் தச்சன். அவன் கமுகுக் குலைகளைத் தொங்கவிட்ட சோலையாகிய வண்ணப்பந்தரில் கட்டிய மேகமாகிய சீலையின் மீது எழுந்து காணும் பலமணித் தொகுதிகள் போல் கதிர்களையுடைய நெற்கற்றைகள் விளங்கும் மருத நில வயல்களைக் கொண்ட மதுரைக்கு அரசியே ! வருக ! மலையத்துவச பாண்டியன் பெற்ற பெருவாழ்வே வருக ! வருக !

@KTBS
NOT TO BE REPUBLISHED

பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை தருக ;

1. அறுகால் தும்பி என்ன செய்கிறது ?
2. திருமகள் எங்கு குடிபுகுந்து மகிழ்ந்திருக்கிறாள் ?
3. மருதமாகிய தச்சன் கட்டிய கோயில்கள் யாவை ?
4. மலையத்துவசன் பெற்ற பெரு வாழ்வை உடையவள் யார் ?

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக ;

1. நெற்கற்றை எவ்வாறு விளங்குகிறது என்று குமரகுருபரர் கூறுகிறார்?

III. பத்து வரிகளில் விடை தருக ;

1. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் மருத நிலத்தை வருணிக்கும் விதத்தை விவரிக்க ?

மொழிப் பயிற்சி

1. சேர்த்து எழுதுக :

தேன் + அருவி ;

கமலம் + கோவில் .

2. எடுத்துக் காட்டு போன்று முதல் எழுத்தை மாற்றி எழுதி வேறு பொருள்படும் சொற்களைக் குறிப்பிடுக :

(எ-டு) சுண்ணம்	-	மகரந்தம்
வண்ணம்	-	நிறம்
ண்ணம்	-	
ண்ணம்	-	
ண்ணம்	-	

இ. செயல் திறன்

1. உருவக அணியைத் தெரிந்து கொள்க :

" கமலக் கோயில் பல சமைத்த தச்சன் " -மருத நிலமாகிய தச்சன் தாமரைக் கோயில்களைப் பல அமைத்துள்ளான் - என்பது பொருள், மருத நிலத்தைத் தச்சனாக உருவகித்துள்ளார் . (ஒன்றை இன்னொன்றாகவே கூறிவிடுவது உருவகம்)

@KTBS
NOT TO BE REPUBLISHED

2. உவமை அணியைத் தெரிந்து கொள்க :

" மணிக் கொத்து விரிந்தால் எனக் கால் நிமிர்ந்து தலை விரியும் குலைநெல் கற்றை பல -உவமை. மணிக்கொத்து விரிந்திருப்பதைப் போன்று தாள் நிமிர்ந்து தலைவிரிந்த குலை நெற்கற்றை .

நெற்கற்றை விரிந்திருப்பதற்கு மணித்தொகுதிகள் விரிந்திருப்பது உவமையாக்கப் பட்டுள்ளது .

ஈ. வாழ்க்கைத் திறன்

1. வயலும் வயல் சேர்ந்த நிலமும் மருத நிலமாகும். இதைப் போல மற்ற நான்கு நிலங்கள் யாவை என்று எழுதவும் .
2. பிள்ளைத் தமிழ் போன்று வேறு இரண்டு சிற்றிலக்கியங்களைக் கேட்டறிக .

@KTBS NOT TO BE REPUBLISHED

2. மதுரைச் சொக்க நாதர்

திருவிளையாடல் அம்மானை

தண்சுமந்த வையைதனில் சார்ந்துமது ரேசனன்னீர்ப்
பெண் சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்காய் அம்மானை
பெண் சுமந்தோன் மண்சுமந்தான் பிட்டுக்காய் ஆமாகில்
மண் சுமந்து மாற்றடியேன் வாய்ந்தனன் காண் அம்மானை
மாவினைத் தீ மேலாக்கு வந்திதனால் அம்மானை .

- நாகலிங்கப்பிள்ளை

(மாணிக்கவாசகரை வையை ஆற்றில் சுடுமணலில் கிடத்தி வருத்த, இறைவன் வையையை பெருகுவித்தான். மதுரையில் இருந்த ‘ வந்தி ’ என்பாளுக்கு ஆள் இல்லாமையால் இறைவனே பிட்டுக்குக் கூலியாளாக வந்து மண் சுமந்தான் .)

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

இந்நூல்மதுரைச்சொக்கநாதர்மீதுபாடப்பெற்றது.ஆசிரியர்,சிவனுடைய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் இந்நூலில் விளக்கியுள்ளார். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு திருவிளையாடலைக் கொண்டு அறுபத்தி நான்கு செய்யுட்களால் சொற்சுவை பொருட்சுவைகளுடன் சிறந்து விளங்குகின்றது .

ஆசிரியர்குறிப்பு :

இந்நூலின் ஆசிரியர் நாகலிங்கப் பிள்ளை. இவர் திருநெல்வேலியைச் சார்ந்தவர், கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், அம்மானைப் பாடல்கள் இயற்றுவதில் வல்லவர் .

அருஞ்சொற் பொருள் :

மதுரேசன் - மதுரைச்சொக்கநாதன் - சிவன் ; மாறு - மிலாறு – வளையும் குச்சி ; வந்தி - மலடி.

கருத்துரை :

கங்கையாகிய நல்ல பெண்ணைத் தலையில் சுமந்த சொக்கநாதன், குளிர்ச்சியைச் சுமந்துவரும் வையை ஆற்றில் பிட்டுக்காக மண் சுமந்தான். பிட்டுக்காக மண்சுமந்தான் என்றால், அவன் மண்ணைச் சுமந்து பாண்டியனால் பிரம்படி ஏன் ஏற்றான் ? மாவினைத் தீயின் மேல் வைத்து ஆக்கிப் பிட்டு வாணிகம் செய்யும் வந்தியினால் ஏற்றான்.

நினைவில் கொள்க :

‘அம்மானை ’ என்பது மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று. அம்மானை விளையாட்டுக்குப் பயன் படுத்தப்படும் " காய் " ’அம்மானை’ எனப்படும். அதனை மகளிர் தம்கையில் கொண்டு தம்மனையகத்து விளையாடினர் .

©KTBS NOT TO BE REPUBLISHED

அ. பயிற்சி

I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. தண் சுமந்த _________ தனில் சார்ந்து மதுரேசன் .
2. பெண் சுமந்தோன் _______ பிட்டுக்காய் .

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. மதுரேசன் தன் தலையில் யாரைச் சுமந்துள்ளான் ?
2. மதுரைச் சொக்கநாதன் மண்ணைச் சுமந்ததன் காரணம் யாது ?
3. பிரம்பால் அடிகொடுத்தவர் யார் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. பாண்டியனால் மதுரைச் சொக்கநாதன் பிரம்படி பட்டது ஏன் ?

ஆ. மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக

மதுரேசன் + நன்னீர் ; மாறு + அடியேன் ; மா + வினை ; பிட்டுக்கு + ஆய் ; ஆம் + ஆகில் ; தன் + ஆல் .

இ. செயல்திறன்

1. கலந்துரையாடல் :

சிவனின் திருவிளையாடல்களில் உமக்குத் தெரிந்த வேறு சில வற்றை உம் நண்பர்களுடன் கலந்துரையாடுக .

2. படித்தறிக :

இரு பொருள் தரும் சொற்கள்,

காய் - பழத்திற்கு முந்தியது காய் .

கோடையில் வெயில் காய்கிறது .

சில விளையாடல்களில் பயன்படும் பொருள்களுக்குக் 'காய்' என்ற சொல் பயன்படுத்துவது நம் மரபு .

3. அறிந்து கொள்க :

பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடற் புராணக் கதையை கேட்டறிந்து கொள்க.

@KTBS
NOT TO BE REPUBLISHED

தனிப்பாடல்

இம்பர்வான் எல்லை இராமனையே பாடி
என் கொணர்ந்தாய் பாணாநீ ! என்றாள் பாணி.
வம்பதாம் களபம் என்றேன் பூசும் என்றாள் !
மாதங்கம் என்றேன் யாம் வாழ்ந்தேம் என்றாள்!
பம்புசீர் வேழம் என்றேன் தின்னும் என்றாள்!
பகடு என்றேன் உழும் என்றாள் பழனம் தன்னைக்
கம்பமா என்றேன் நற்களியாம் என்றாள்!
கைம்மா என்றேன் சும்மா கலங்கினாளே !

-அந்தகக்கவி வீரராகவர்

நூல்குறிப்பு :

இப்பாடல் தனிப்பாடல் திரட்டு என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே இந்நூல் . இங்கு வந்துள்ள இப்பாடல் இரட்டுற மொழிதலாக அமைந்துள்ளது.

ஆசிரியர் குறிப்பு :

அந்தகக்கவி வீரராகவர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பூதூரில் பிறந்து பொன்விளைந்த களத்தூரில் வாழ்ந்தார். இவர் தந்தையாரின் பெயர் வடுக நாதர். இவர் சீட்டுக்கவி பாடுவதிலும் நகைச்சுவை ததும்பப் பாடல் இயற்றுவதிலும் வல்லவர். சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார் .

கருத்துரை :

பாணன் மனைவியாகிய பாடினி, " பாணரே! இராமனைப்பாடி நீ என்ன பரிசு கொண்டு வந்தாய் ? " எனக் கேட்டாள். அதற்குப் பாணன், தான் கொண்டு வந்தது களபம் என்றான். பாடினி பூசிக் கொள்ளுங்கள் என்றாள். மாதங்கம் என்று சொன்னான் அவன். இனி மகிழ்ச்சியாக வாழ்வோம் என்று கூறினாள். அடுத்து, வேழம் எனக் கூறினான். அதற்கு அவள், தின்னுங்கள் என்றாள். அவன் பகடு என்று கூற அவளோ அதனைக் கொண்டு வயலை உழும் என்று கூறினாள். அவன் கம்பமா என்று கூற அவளோ நல்ல களியாகும் என்றாள். அவன் கைம்மா என்று சொல்ல, அவள் திகைத்து நின்றாள் .

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ) I. சரியான விடையைத் தெரிவு செய்க .

1. 'களபம்' என்று கூறிய பாணன் கருதிய பொருள் .

   அ) சந்தனம் ஆ) முத்து

   இ) யானை ஈ) கம்பம்மாவு

2. பாணன் கூறிய வேழம் என்ற சொல்லுக்குப் பாடினி கருதிக் கொண்ட பொருள் .

   அ) கரும்பு ஆ) யானை

   இ) பழம் ஈ) கலப்பை

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக .

1. பாணன் யாரைப் புகழ்ந்து பாடினான் என்கிறார் அந்தகக்கவி ?
2. பாணன் தான் கொண்டுவந்த பரிசுப் பொருள் பற்றி முதலில் கூறிய சொல் யாது ?
3. பாடினி தின்னக் கூடிய பொருள் என்று கருதியதற்கான பாணனின் சொல் யாது ?
4. பாடினி கலங்கிடுமாறு பாணன் கூறிய சொல் யாது ?

III. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக .

1. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?
2. மாதங்கம், பகடு, கம்பமா என்ற பாணனின் சொற்களுக்கு பாடினி உணர்ந்து கொண்ட பொருள்கள் முறையே யாவை ?

@KTBS NOT TO BE REPUBLISHED

IV. பத்து வரிகளில் விடை எழுதுக .

1. ஒரு பொருள் பல சொற்கள் என்ற முறையில் அமைந்த அந்தகக்கவி வீரராகவரின் கவிதை நயத்தை விவரிக்க.

V. இடம் சுட்டிப் பொருள் விளக்குக .

1. வம்பதாம்க ளபமென்றேன் பூசும் என்றாள் .

2. பம்புசீர் வேழமென்றேன் தின்னு மென்றாள் .

ஆ) மொழிப்பயிற்சி

1. பிரித்து எழுதுக .

களபமென்றேன் ; வாழ்ந்தேமென்றாள் ;

பகடென்றேன் ; பழனந்தன்னை ; நற்களியாம் .

@KTBS
NOT TO BE REPUBLISHED

VI. மறுமலர்ச்சிக் கவிதைகள்

1. பள்ளம் மேடுள்ள பாதையிலே

பள்ளம் மேடுள்ள பாதையிலே
பாத்து நடக்கணும் காளைகளே !
பழைய போக்கிலே பயனில்லை - நல்ல
விஷய மிருக்கணும் மூளையிலே - (பள்ள)

நல்லவர் செய்த செயல்களிலே - பயிர்
நடன மாடுது வயல்களிலே - அது
நெல்லு கதிராகி முதிரும் நாளிலே
நில முதலாளிகள் கையிலே - போய்
நிறைந்திடும் மார்கழித் தையிலே (பள்ள)

உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியிலே கலக்குது
ஒற்றுமையில்லா மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது – (பள்ள)

-பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம்

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

1954 முதல் திரைப்படப் பாடலாசிரியாராகப் புகழ்டைந்தார். இவருடைய பாடல்களை உற்று நோக்கும் போது திராவிட இயக்கப்போக்கும் பொதுவுடைமை இயக்கச் சிந்தனையும் நாட்டுப்புற எளிய நடையும் காணப்படுகின்றன .

ஆசிரியர்குறிப்பு :

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், செங்கப் படுத்தான் காடு என்ற கிராமத்தில் 13.04.1930 –ஆம் நாள் கல்யாண சுந்தரம் பிறந்தார். பெற்றோர் திரு.அருணாசலப் பிள்ளை, தாயார் விசாலாட்சி அம்மையார். ஒரு சகோதரர் மற்றும் ஒரு சகோதரி உடன் பிறப்பினர். தந்தையும், தமையனும் கவிஞர்களாவர், பட்டுக்கோட்டையின் துணைவியார் கௌரவம்மாள். நடுத்தர வேளாண் குடும்பத்தைச் சார்ந்தவர்.

கருத்துரை :

பள்ளம் மேடு பார்த்து டக்க வேண்டும் பழைய போக்கிலேயே போனால் பயனில்லை, மூளையைப் பயன்படுத்த வேண்டும் என்று காளைக்குச் சொல்வது போல் மனிதர்களுக்கு எடுத்துரைக்கிறார் .

உழவர்கள் உழைப்பினால் பயிர் வயல்களில் வளர்ந்திருக்கிறது, நெல் முதிரும் நாளில் அது நில முதலாளிகள் கையில் போய்விடும். மலையில் தோன்றும் அருவிகள் தரைக்கு வந்ததும் ஒன்றாய்க் கலக்கின்றன. மனிதகுலம் மட்டும் உயர்வும் தாழ்வும் வளர்த்து ஒற்றுமையில்லாமல் அடித்துக் கொள்கிறது .

அ. பயிற்சி

I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :

1. பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் பழைய போக்கில் என்ன இல்லை என்கிறார்?
2. நெல் முதிர்ந்தால் யார் கைக்குப் போய்ச் சேரும் ?

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக :

1. காளைகளுக்குச் சொல்வதுபோல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?
2. அருவிக்கும் மனிதகுலத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையை பட்டுக்கோட்டையார் எவ்வாறு விளக்குகிறார் ?

III. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :

" ஒற்றுமை யில்லா மனிதகுலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது "

ஆ. மொழிப் பயிற்சி

I. பிரித்தெழுதுக :

1. பயனில்லை, 2. ஒற்றுமையில்லாத .

II. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :

1. பள்ளம் மேடு, 2. உச்சிமலை .

வாழ்க்கைத் திறன் :

மனிதகுலம் ஒற்றுமையில்லாமல் இருப்பதற்கான காரணம் என்னவென்று உணர்ந்து , அதைப் போக்கும் வழிகளைத் தெரியப்படுத்துக.

@KTBS NOT TO BE REPUBLISHED

2. நிலக்கரி

1) ஆலைகள் இயக்கி வைப்பாய்
அனல் மினும் தோற்றி வைப்பாய்,
சாலைகள் அமைப் பதற்குச்
சார்துணை நீயே யாவாய்,
ஏலவே உன்னால் நாட்டில்
எண்ணிலாத் தொழிற் கூடங்கள் ;
வேலை சூழ் வையம் மக்கள்
வேண்டிய மட்டில் ஈவாய் !

2) புறத்தினில் கருத்த காந்தி
பொதுவென உழைத்து யர்ந்தார் ;
நிறத்தினில் வெறுத்தார் : நெல்சன்
நெஞ்சுறை தலைவ ரானார் .
திறத்தினில் உன்னைக் கண்டேன்
சிந்தியா மக்கட் கூட்டம்
நிறத்தினில் வேறு பாடு
நினைத்திடல் ஏனோ சொல்வீர் !

- வ. கலியபெருமாள்

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

இயற்கை விருந்து தொடங்கிச் சிற்றூர் ஈறாகப் பல்வேறு தலைப்புகளில், எழிலார்ந்த கவிதைகளைப் படைத்துத் தமது கவிதைத் திறமையை இந்நூலில் புலவர். வ. கலியபெருமாள் வெளிப் படுத்தியுள்ளார் .

ஆசிரியர்குறிப்பு :

புலவர் வ. கலியபெருமாள் புதுவை மாநிலத்தில் சேலிய மேடு என்னும் ஊரில் 30.06.1940-ல் பிறந்தார். இவரின் தந்தை பெயர் வரதன், தாய் சீத்தம்மாள் ஆவார். ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றவர், கவிஞரேறு வாணிதாசனின் மருகர் .

அருஞ் சொற்பொருள் :

ஏலவே - இயன்ற வழிகளில் எல்லாம் ; வேலை - கடல் .

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. தொழிற் சாலைகள் இயங்கிட வைப்பது .

   அ) நிலக்கரி ஆ) அடுப்புக்கரி

   இ) விறகு ஈ) நீர்

2. அனல் மின்சாரத்தைத் தரும் பொருள் .

   அ) மண் ஆ) நிலக்கரி

   இ) மின்சாரம் ஈ) நீர்

3. புறத்தினில் கருத்த காந்தி

   அ) நிலக்கரி ஆ) நெல்சன்

   இ) காமராசர் ஈ) மகாத்மா காந்தி

II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. சாலைகள் அமைப்பதற்குச் _______ நீயே ஆவாய் .

2. ஏலவே உன்னால் நாட்டில் எண்ணிலாத் _______ .

3. நிறத்தினில் வெறுத்தார் _______ நெஞ்சுறை தலைவரானார் .

III. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. நிலக்கரி இயக்கியும் தோற்றியும் வைப்பன யாவை ?
2. நிலக்கரி சார்துணையாய் இருந்து எவற்றை அமைத்துத் தருகிறது?
3. புறத்தினில் கருத்த காந்தி யார் ?
4. நெஞ்சுறை தலைவரானவர் யார் ?

IV. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?
2. நிலக்கரி நிற உவமைக்குரியவரின் பெருமையைக் கவிஞர் கூறுமாறு விளக்குக .

NOT TO BE REPUBLISHED ©KTBS

V. இடம் சுட்டிப் பொருள் விளக்குக .

1. சாலைகள் அமைப்பதற்குச்
   சார் துணை நீயே யாவாய் .
2. ‘ திறத்தினில் உன்னைக் கண்டேன் ’

ஆ. மொழிப் பயிற்சி

1. சேர்த்து எழுதுக .
   சார்பு + துணை ; நீயே + ஆவாய் ;
   மக்கள் + கூட்டம் .
2. பிரித்து எழுதுக .
   தலைவரானார் ; உன்னைக்கண்டேன் .
3. எழுத்து மாறுபடுவதால் பொருள் மாறுபடுதலைத் தெரிந்து கொள்க:
   ஆலை / ஆளை ; வேலை / வேளை .

@KTBS
NOT TO BE REPUBLISHED

உரைநடை

1. உறுசுவை உரையாடல்

திருக்குறள் மணி திரு.அ.க.நவநீத கிருட்டிணன்.

('உரையாடல்' உயர்ந்ததோர் இலக்கியக் கலையாகவே மேலை நாடுகளில் மதிக்கப்படுகிறது. இது பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்கும் நற்கலையாகப் போற்றப்படுகிறது. பல நூற்றாண்டுகளாகவே இக்கலை அந்நாடுகளில் நன்கு வளர்ந்து வந்துள்ளது. டாக்டர் ஜான்சன் போன்ற அறிஞர்கள் இக்கலையில் சிறந்து விளங்கினர். அறிஞர்கள் கூடியிருந்து விருந்துண்ணும் வேளையில் மகிழ்ந்து பேசும் உரையாடல்கள் சிறந்த இலக்கியமாகவே இன்பந் தரும்)

@TNTB
NOT TO BE REPUBLISHED

தமிழகத்துப் புலவர்கட்கு இன்பந் தரும் இலக்கிய உரையாடல் புதுமையானதன்று. சங்கப் புலவர்களுடன் அளவளாவிப் பழகி உரையாடி இன்புற்று நக்கீரர் அக்கூட்டத்தைப் பிரிய நேர்ந்த போது .

'ஒன்றுயிர்த் துணையாம் சங்கத் (து)
உறவையெப் பொழுது காண்பேன் ? '

என்று ஏங்கி உளங் கசிவாராயின் அவர் இலக்கிய உரையாடல் இன்பத்தில் எத்துணைத் திளைத்திருக்க வேண்டும் ? இதனால் அன்றோ தெய்வப் புலவர் திருவள்ளுவனாரும்

' உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் '

என்று புலவர் இயல்பினைப் புகல்வாராயினர் .

நாடக இலக்கிய நல்லறிஞராகிய சேக்ஸ்பியர் ' உரையாடல் இனியதாயும் இயற்கையான திறமை யுடையதாயும் தாழ்வெனும் தன்மை நீங்கிய தாராளம் உடையதாயும் வஞ்சமில்லாக் கல்வி நலம் வாய்ந்ததாகவும் பொய்மையில்லாப் புதுமை நலம் கமழ்வதாயும் இருத்தல் வேண்டும் ' என்று உரையாடலுக்கு இலக்கணம் வகுத்துள்ளார். இவ்விலக்கணத்திற்கு ஏற்புடைய இலக்கியமாகப் பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல்கள் விளங்கிச் சிறந்த இன்பம் பயந்தன .

பேராசிரியர் சேதுப்பிள்ளையுடன் உரையாடும் போது பொழுது போவதே தெரியாது. அவருடன் பேசிக் கொண்டிருப்பவர் தேனுண்ட வண்டென மதிமயங்கி இடம் பெயர மனமில்லாது இருப்பர். அவர் உரையாடும் போது வெளியிடும் செய்திகள் எல்லாம் இலக்கிய இன்பம் குழைந்ததாகவே இருக்கும். பேராசிரியர் சேதுப்பிள்ளையுடன் ஐந்து நிமிடம் உரையாடி வந்தால் அதைப் பற்றி ஐந்து நாட்கள் சிந்திக்கலாம் என்பர். அத்துணைக் கருத்து நலம் கெழுமிய உரையாடலாக அவர் பேச்சு அமையும் .

சேதுப்பிள்ளையின் செந்தமிழ் உரையாடல் கலை நலத்தைப் புலப்படுத்தும் சில நிகழ்ச்சிகளை நோக்குவோம். பேராசிரியர் சேதுப்பிள்ளையின் தலைமையில் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் மாணவர்கள் ஆராய்ச்சி நிகழ்த்துவர் . அவர்கள் தமக்குரிய ஆராய்ச்சிக் காலம் முடிவுற்றதும் பேராசிரியரிடம் விடைபெற்றுக் கொள்ளும் கடைசி நாளில் அவருடன் இருந்து விருந்தருந்தி மகிழ்வர். ஒரு சமயம் அத்தகைய விருந்தொன்று நடைபெற்றது. விருந்துக்கு வேண்டிய பண்டங்கள் விடுதிகளிலிருந்து கொண்டுவர அப்போதயை ஆராய்ச்சி மாணவர்கள் விரும்பவில்லை. அதற்குக் காரணம் அவர்களுள்ளே இரு மாணவியர் இருந்தனர். திருவாட்டியர் கனக சுந்தரி, இந்திரா என்னும் அம்மாணவியர் இருவரும் பண்டங்களைத் தங்கள் இல்லத்தில் தாமே சுவையாகத் தயாரித்துக் கொண்டு வந்தனர் .

பேராசிரியர் சேதுப்பிள்ளைக்கு விருப்பமான பண்டங்களில் ஒன்று தயிர்வடை அதனை எவ்வாறோ அறிந்து கொண்ட அம்மாணவியர் மிகவும் கருத்தூன்றித் தயிர்வடையைச் சுவை கனியத் தயாரித்திருந்தனர். எல்லோருக்கும் பண்டங்கள் பரிமாறப்பெற்றன. விருந்திற் கலந்து கொண்ட பல்கலைக்கழக இந்தித் துறைத் தலைவர் டாக்டர் திரு.சங்கரராசு நாயுடு என்பார் தயிர் வடையை நன்றாகச் சுவைத்து உண்டார். அதன் இனிமையைக் கண்ட அவர், "சென்னையிலுள்ள எந்த விடுதியில் இந்த வடை தயாரிக்கப் பட்டதோ ? மிகவும் சுவையாக இருக்கிறதே !" என்று பாராட்டினார். உடனிருந்த மாணவர், தயாரித்த மாணவியர் பெயரை உரைப்பதற்குள் பேராசிரியர் மெல்ல சிரிப்பொலியை எழுப்பினார். அது கேட்டு எல்லோரும் அவர் பக்கம் திரும்பினர். அவர் மாணவியர் பக்கம் தம் கரத்தை நீட்டிப் புன்னகை பூத்த முகத்துடன், ‘இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம் ’ என்ற கம்பன் கவித்தொடரை நினைவூட்டினார். அப்போது எல்லோரும் கொல்! எனச் சிரித்து ஆரவாரம் செய்தனர்.

அந்நேரத்தில் சேதுப்பிள்ளை தந்த சொல்விருந்து, மாணவர்கள் ஊட்டிய நல்விருந்தையும் எளிதில் வென்று விட்டது .

பேராசிரியர் சேதுப்பிள்ளை பல்கலைக்கழக அலுவலகத்திற்கு வரும்போது பெரிய வெள்ளிக் கூசாவொன்றில் தெள்ளிய குளிர்நீர் கொண்டு வருவார், நண்பகலுக்குள் அத்தண்ணீர் தீர்ந்துவிடும். பக்கத்து அறையிலிருந்து பணியாற்றும் இந்தித் துறைத் தலைவர் டாக்டர் சங்கரராசு நாயுடு இந்த நன்னீரை நாடி ஓடியோடி வருவார். ‘ இந்திப் பயிர் செழிக்கத் தமிழ் நீர்தான் தேவை போலும் ’ என்று சொல்லிக் கொண்டே சேதுப்பிள்ளை தம் கூசாவைக் காட்டுவார் .

ஒருநாள் தென்னாப்பிரிக்காவில் வாழும் இரண்டு தமிழ்ப் பெரியார்கள பேராசிரியர் சேதுப்பிள்ளையைக் கண்டு பேச வந்தனர். அன்று வெயில் அதிகமாக வீசியது. வந்தவர்கள் குளிர் நீர் பருகுதற்கு விரும்பினர். சேதுப்பிள்ளையின் கூசாவின் நீர் முழுதையும் குடித்து விட்டனர். அவர்கள் சிறிது நேரம் உரையாடி நன்றி கூறி விடைபெற்றுச் சென்றனர். பின்பு வழக்கம் போல் இந்தித்துறைத் தலைவர் வந்து நின்றார். கூசாவிலோ கொஞ்சமும் நீரில்லை, பேராசிரியர் அவரை நோக்கி, " இன்று இரு பெருந்தகையர் வந்தனர், அதனால் தண்ணீர் தீர்ந்து விட்டது " என்று நயம்பட உரைத்தார். அது கேட்ட அங்கிருந்த மாணவர் எல்லோரும் ‘ பெருந்தகையர் ’ என்ற சொல்லை இரு பொருள் தோன்ற உச்சரித்த பேராசிரியரின் உரையாடல் கலைநலத்தைக் கண்டு உவந்தனர். பெருந்தகையர் என்ற சொல் ‘ மிக்க தகுதியுடையார் ’ என்றும் ‘ மிக்க தாகமுடையார் ’ என்றும் இரு பொருள் தந்து நின்றதைத் தெரிந்து மகிழ்ந்தனர் .

ஒரு நாள் முப்பதாண்டிற்கும் குறைந்த இளைஞராகிய நண்பர் ஒருவர்,பேராசிரியர் சேதுப்பிள்ளையைக் காணுதற்கு வந்தார். அவர் இளைஞராயினும் அவரது தலை வழுக்கை விழுந்ததாக இருந்தது. அவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதே சேதுப்பிள்ளை தம் அருகிருந்த ஆராய்ச்சி மாணவர் ஒருவரை நோக்கி, " இவர் யார் என்று தெரியுமா ? " என்று கேட்டுக் கொண்டே, " இவர் என் தலையாய நண்பர்களுள் ஒருவர் " என்று சொல்லித் தம் தலையையும் இருமுறை தடவிக் கொண்டார். அவ்வாசகத்தின் நயத்தை உடன் உணர்ந்துகொள்ள முடியாத அம்மாணவர் சற்று நேரங்கழித்து, ‘ வழுக்கைத் தலையால் ஒற்றுமைப்பட்ட தலையாய நண்பர்கள் இவர்கள் ! ’ என்ற குறிப்பை உணர்ந்து திடீரென்று சிரித்தார் .

© KTBS NOT TO BE REPUBLISHED

தமிழகத்தில் பிள்ளையார் உடைப்பு இயக்கம் நடந்து கொண்டிருந்த நாளில் ஒரு சமயம் அது பற்றிப் பேராசிரியர் சேதுப்பிள்ளை தம் ஆராய்ச்சித்துறை மாணவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவர், " எனக்கும் பிள்ளையாரிடம் ஒரு வருத்தம் உண்டு " என்றார். மாணவர்களுக்கெல்லாம் அவர் பேச்சுப் பெருந்திகைப்பாக இருந்தது. ஏனென்றால் அடிக்கடி திருநெல்வேலிச் சந்திப்பிள்ளையாரைப் பற்றி தம் மாணவர்களைச் சிந்திக்கவும் அவரை வந்திக்கவும் தூண்டுபவர். அத்தகையார் இங்ஙனம் சொல்லுகிறாரே என்று அவர்கள் திகைத்தனர். பின்பு அதற்கு விளக்கந் தந்தார் பேராசிரியர். தமிழ் நாட்டிலுள்ள எல்லாச் சாதியினரும், தம் சாதிப்பெயருடன் " ஆர் " விகுதியைச் சேர்த்துச் செட்டியார், முதலியார், கோனார் என்று வைத்துக் கொள்கின்றனர், ஆனால் ‘பிள்ளை’ இனத்தைச் சேர்ந்த நாங்கள் ‘பிள்ளையார்’ என்று வைத்துக் கொள்ள வாய்ப்பில்லாமல், எங்களுக்குரிய ‘ஆர்’ விகுதியைப் பிள்ளையார் எடுத்துக்கொண்டாரே ! அதனால் நாங்கள் வெறும் பிள்ளையாக வன்றோ வாழ வேண்டியிருக்கிறது ! " என்று சொல்லி அங்கிருந்த எல்லோரையும் சிரிக்க வைத்து விட்டார் .

ஒரு சமயம் சேதுப் பிள்ளை தம் மாணவர் ஒருவருடன் திருவனந்தபுரத்திற்குப் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். செங்கோட்டையைக் கடந்து புகை வண்டி சென்று கொண்டிருந்தது. ‘ புனலூர் ’ நிலையம் வந்தது, அந்த பெயர் எழுதிய பலகையைக் கண்டதும் சேதுப்பிள்ளையின் செந்தமிழ் நெஞ்சத்தில் இன்பம் கொஞ்சியது. அருகிருந்த மாணவரிடம், "ஊரின் நீர்வளமும் நிலவளமும் ‘ புனலூர் ’ என்ற பெயருள்ளேயே பொதிந்து கிடக்கும் சிறப்பினைப் பார்த்தீர்களா ? " என்று அப்பெயரழகைச் சுவையுற விளக்கினார். அங்கு புகைவண்டி நீர்குடித்தது. அதைக் கண்ட சேதுப்பிள்ளை, ‘ புனலூர்’ வந்தவுடன் புகைவண்டிக்கும் புனல் குடிக்க வேண்டுமென்ற உணர்வு வந்து விட்டதல்லவா ? " என்று நகைச்சுவையுடன் உரையாடினார் .

இங்ஙனம் பேராசிரியர் சேதுப்பிள்ளை தம் மாணவர்களோடும் நண்பர்களோடும் உரையாடும் போதெல்லாம் பயனற்ற சொல் ஒன்றுகூட அவர் வாயில் உதிப்பதில்லை. எல்லாம் இலக்கியமாகவே வெளிவரும் அவை தேனாகவும் தெள்ளமுதமாகவும் கேட்பவர் உள்ளத்திற்கு தித்திப்பு ஊட்டுவனவாகும். அறிவையும் உணர்வையும் பெருக்கி வளர்ப்பனவாகும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

நூற்குறிப்பு :

திருக்குறள் மணி வித்துவான் திரு அ.க.நவநீதி கிருட்டினன் அவர்களால் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் சிறப்பினை விரித்துரைத்து இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் ‘ டாக்டர் சேதுப்பிள்ளை ’ என்னும் இந்நூல் அமைத்துள்ளது. இது ஒரு வரலாற்று நூல் என்று எண்ணத்தக்க நிலையில் இலங்குகின்றது. ‘ உறுசுவை உரையாடல் ’ என்னும் கட்டுரை இந்நூலில் அமைந்துள்ளது .

அருஞ்சொற் பொருள் :

திளைத்தல் - மகிழ்ச்சி அடைதல், ; உவத்தல் - மகிழ்தல் ; புலப்படுத்தும் - வெளிப்படுத்தும் ; நலம் - அழகு ; கரம் - கை ; வந்தித்தல் - வணங்குதல் ; கெழுமிய - சிறந்த .

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சி

அ) I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. கருத்து நலம் கெழுமிய உரையாடலாகப் பேராசிரியர் ______ பேச்சு அமையும் .
2. சேதுப்பிள்ளை அவர்களின் விருப்பமான தின்பண்டங்களுள் ஒன்று _____ .

II. மூன்று வாக்கியங்களில் விடை தருக :

1. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப் படுகிறது?
2. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன ?
3. நக்கீரர் சங்கப் புலவர்களைப் பிரியும்போது கூறியன யாவை ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

1. சேக்ஸ்பியர் உரையாடல் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார் ?
2. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல் எவ்வாறு இருக்கின்றது?
3. பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்களுக்கு பிள்ளையார் மேல் வருத்தம் எதற்கு ?

IV. பத்து வரிகளில் விடை தருக :

1. சேதுப்பிள்ளையவர்கள் ‘ இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம் ’ என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்க.
2. சேதுப்பிள்ளையவர்கள் ‘ பெருந்தகையர் ’ என்ற சொல்லைப் பயன்படுத்திய உரையாடலை விளக்குக .

V. இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக :

1. ‘சென்னையிலுள்ள எந்த விடுதியில் இந்த வடை தயாரிக்கப் பட்டதோ ? மிகவும் சுவையாக இருக்கிறதே ! ’
2. " இந்திப் பயிர் செழிக்கத் தமிழ் நீர்தான் தேவை போலும் " .
3. " இவர் என் தலையாய நண்பர்களுள் ஒருவர் " .
4. " புனலூர் வந்தவுடன் புகைவண்டிக்கும் புனல்
   குடிக்க வேண்டுமென்ற உணர்வு வந்துவிட்டதல்லவா " ?

ஆ) மொழிப்பயிற்சி

1. சேர்த்தெழுதுக :

   நல்ல + கலை , வஞ்சம் + இல்லாத , விருந்து + ஒன்று ,

   உயிர் + துணை , தேன் + உண்ட , சிரிப்பு + ஒலி .

2. பிரித்து எழுதுக :

   செந்தமிழ் , விருந்தருந்தி , நன்னீர் , தமக்குரிய , கருத்தூன்றி , பெருந்தகையர் .

3. எதிர்ச் சொல் தருக :

   புதுமை , இயற்கை , பிரிதல் , இளைஞர் .

4. வாக்கியத்தில் அமைத்தெழுதுக ;

   உளங்கசிவர் , மதிமயங்கி , உரையாடற்கலை .

@KTBS NOT TO BE REPUBLISHED

இ. செயல் திறன்

1. பேராசிரியர் சேதுப் பிள்ளையின் உரையாடலைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக .
2. நகைச்சுவையாகப் பேசுவது எப்படி என்பது குறித்து கலந்துரையாடுக.
3. ‘பிரிதல்’- என்பது தொழிற்பெயர் - இது போன்ற தொழிற் பெயர்ச் சொற்களைத் திரட்டுக .

@KTBS
NOT TO BE REPUBLISHED

2. வானம்பாடி

பேராசிரியர். மு . வரதராசனார் .

(தமிழ்ப் புலவர்கள் புலமைத்திறம் மிகுந்தவர்களாய் இருந்தாலும் வாழ்க்கைத்திறம் இல்லாதவர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். சங்க காலப் புலவர்களிலிருந்து பாடங்கற்ற சிலர் வாழ்க்கைத் திறன் பெற்றவர்களாக வாழ்ந்து நிலைத்தனர். திரு.வி.க. அவர்கள் சங்கப் புலவரைப் போலவே அறிவுத் திட்பமும் உணர்ச்சிப் பெருக்கும் உடையவர். ஆனால் வாழ்க்கைத்திறன் இல்லாததால் செல்வச் செழிப்பில்லாமல் வாழ்ந்தவர் என்ற நிலையையும் வானம்பாடியாக வாழ்ந்தவர் என்ற உண்மையையும் டாக்டர். மு . வ .கூறுவதைப் பார்ப்போம் .)

பெரியோர் சிலர் வாழ்ந்த வாழ்க்கையைப் போற்றுகின்றோம்; பின்பற்றுவதில்லை; போற்றமுடிகின்றது; பின்பற்ற முடிவதில்லை; போற்ற விரும்புகின்றோம், பின்பற்ற விரும்புவதில்லை .

புத்தர் பெருமான் வாழ்க்கைத் தூய்மையைப் போற்றுகின்றோம். ஆனால் உயிர்களின் துன்பத்தைக் கண்டு அவர் போல் உள்ளம் கசிந்து உருக முடியவில்லை; உண்மை காண்பதற்காக மனைவியையும் மகனையும் துறந்து காட்டிற்குச் செல்ல விரும்பவில்லை. ஆர்க்கிமேடிஸ் என்னும் மேற்கு நாட்டு அறிஞரின் ஆராய்ச்சித் திறமையைப் போற்றுகின்றோம். ஆனால் அவர்போல் தன்னை முற்றிலும் மறந்து எண்ணிக் கொண்டிருக்க முடியவில்லை. நாட்டினுள் பகைவர் புகுந்ததும் அறியாமல் எண்ணத்தில் ஆழ்ந்துகொலைக்கு ஆளாக விரும்பவில்லை. பாரி என்னும் தமிழ்நாட்டு வள்ளலின் கொடை வண்மையைப் போற்றுகின்றோம். ஆனால் அந்த வள்ளல் போல் எதையும் எவர்க்கும் வழங்கிவிட்டு மகிழ முடியவில்லை. ஏறி வந்த தேரை முல்லைக் கொடிக்கு ஈந்து விட்டுக் காட்டு வழியில் காலால் நடந்து செல்ல விரும்பவில்லை. மாணிக்க வாசகரின் கடவுட் காதலைப் போற்றுகின்றோம். ஆனால் அவர் போல் பகல் இரவாவதும் அறியாமல் நினைந்து நினைந்து உருக முடியவில்லை. அமைச்சு இழந்து பித்துப் பிடித்து ஊரூர் திரிய விரும்பவில்லை.

உலகில் பலர் அறிவே நோக்கமாகக் கொண்டு வாழ்கின்றார்கள். உணர்வை வளர்க்காமல் விடுகின்றார்கள். முடிவில் நல்ல யந்திரங்களாக மாறுகின்றார்கள். மற்ற யந்திரங்கள் இரும்பால் ஆனவை. மனித யந்திரங்கள்

NOT TO BE REPUBLISHED @KTBS

மூளையால் ஆனவை. இவர்களால் பரிட்சைகள் பெருகும் ; தந்திரங்கள் வளரும் ; சட்டங்கள் விரியும் ; போர்கள் மல்கும் ; தொல்லைகள் ஓங்கும் . இங்கு மூளை யந்திரங்கள் ஒரு குடும்பத்தில் மிகுமானால் அந்த இனத்தால் மற்ற இனங்களுக்குத் தொல்லை. ஒரு நாட்டில் மிகுமானால் அந்த நாட்டால் மற்ற நாடுகளுக்கும் குழப்பம். நாளடைவில் இத்தகைய யந்திரங்களை அழிக்க இயற்கையறம் முன் வருகின்றது. உலக வரலாறு இதற்குச் சான்று பகரவல்லது. இந்த யந்திர மனிதர்களால் நன்மை ஒரு சிலவே. தீமையோ மிகப்பல. உலகத்திற்கு இந்த யந்திரங்கள் வேண்டுமா ?

சிலர் வாழ்க்கையில் உணர்வே பெருகியிருக்கும் ; அவர்கள் அறிவை- சிறப்பாக உலகியல் அறிவை வளர்க்காமல் விடுகின்றார்கள், இவர்களால் பிறர்க்குத் துன்பம் செய்ய முடியாது. ஆனால் பிறர் செய்யும் துன்பம் எல்லாம் இவர்களைச் சாரும் இவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிக் கவலையில்லை. இவர்கள் சாரும் இவர்கள் வாழ்க்கையில் ஒழுங்கு என்று ஒன்று இல்லை ; கடமை என்று ஒன்று இல்லை, அவ்வப்போது உணர்ந்து விழையும் பொருள்களை நாடி நாடி அலைவார்கள். எவரிடத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்னும் நடைமுறை இவர்களுக்குத் தெரியாது. தங்களை ஏமாற்றுகின்ற மூளை யந்திரங்களிடம் தந்திரம் பேசத் தெரியாது. அந்த யந்திரங்களிடம் உண்மை பேசி இடுக்கண் படுவார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கலையில் வல்லவராக இருப்பது இயற்கை. அந்தக்கலை காவியமோ, ஓவியமோ, இசையோ, நாடகமோ, பிறிதோ எதுவாயினும் அதன் பொருட்டுக் காலங்கழிப்பார்கள். ஆனால் காசு பெறாமல் கவலைப் படுவார்கள் .

புலவர், ஓவியர், பாணர், கூத்தர் முதலானவர்களின் வரலாறுகளை ஆராய்ந்து பார்த்தால் எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இத்தகையை மக்களைக் காணல் கூடும். நன்மக்கள் சிலர் இவர்களால் உலகம் பயன் அடையும் எனக்கருதி, இவர்களைப் போற்றி வாழ்விப்பதும் உண்டு. வரலாறுகளில் இந்த உண்மையும் காணலாம். பண்டைத் தமிழ் நாட்டில் அரசர்களும் வள்ளல்களும் இந்தத் தொண்டு ஆற்றி வாழ்ந்தார்கள்; உணர்வு பெருகிய புலவரையும் பாணரையும் கூத்தரையும் பிறரையும்

NOT TO BE REPUBLISHED ©KTBS

வாழ்வித்தார்கள். அந்த நற்செயலால் கலைகளை வளர்த்தார்கள்; மூளையரான யந்திரங்களின் தந்திரக் கொடுமையிலிருந்து கலைஞரையும் கலைகளையும் காப்பாற்றினார்கள். உணர்வு பெருகிய இந்த மக்களைக் காற்றாடிகள் எனலாம். காற்றடிக்கும் திசையெல்லாம் சென்று சுழன்று பறத்தல் இவர்கள் இயற்கை. அரசர்களும் வள்ளல்களும் ஆகிய புரவலர்கள் இவர்களைத் தங்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொண்டிருந்தார்கள். அந்தத் தொடர்பு கொடையால் ஆனது. கொடைதான் அந்த காற்றாடிகளைப் பற்றி இயக்கிய நூல். கொடைநூல் அற்றவுடன் காற்றாடிகள் எங்கோ மறைந்தன.

திரு. வி .க அறிவும் உணர்வும் ஒருங்கே நிறைந்தவர். சில குறிப்புகள் உண்மைகள் விளக்கும். அவருடன் உறவுகொள்ள விழைந்த நண்பர் ஒருவரை அழைத்துச்சென்று, " இவர் உங்களைப் பார்க்க வந்தவர். இவர் பெயர்..... "

என்று முடிக்குமுன், " இவரை நன்றாகத் தெரியுமே. இவர் ஊர் பூங்குளம் அல்லவா ? ஜவ்வாது மலை ஓரம், இவரை....... அப்போது கண்டு பேசியிருக்கிறேனே நல்லது " என்றார். என்ன நினைவாற்றல் !

மாநாடுகள் நடத்தும் காலங்களிலும் தலைமை தாங்கும் காலங்களிலும் குறித்த நிகழ்ச்சி முறைக்கு ஏற்றவாறு கடமைகளைத் தவறாமல் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர் திரு. வி. க. ஆங்கிலேயரும் தோற்குமாறு, குறித்த நேரத்தில் கூட்டத்திற்கு வருகின்றவர் திரு. வி. க. நூற்றுக்கணக்கான குறிப்புக்களைச் சிறந்த சொற்பொழிவில் விரிவாக விளக்கி முடிவுரையில் அந்தக் குறிப்புகளை ஒன்று விடாமல் முறைப்படி தொகுத்து அழகுபெற அமைத்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் திரு. வி. க .

அவர் அறிவு திட்பம் வாய்ந்தது. அது யாருக்குத் தெரியும், தெரியுமா? தொழிலாளர் போராட்டங்களில் மனம் கலங்கிய மில் முதலாளிகளான ஆங்கிலேயர் சிலருக்குத் தெரியும். தாமாக எவ்வளவோ உதவிகளைச் செய்ய முன் வந்தும் உடன்பாடு பெறாமல் மறுப்பையே பெற்ற செல்வர் சிலருக்குத் தெரியும் மாய வாழ்க்கை மாய வாழ்க்கை என்று எவ்வளவோ பேசியும் அவர் மனத்தைச் சிறிதும் மாற்ற முடியாமல் தங்கள் மனமே மாறிய துறவிகள் சிலருக்குத் தெரியும். எத்தனையோ வழியில் அவரைத் திருத்த முயன்றும் முடியாமல் இறுதியில் தாங்கள் திருந்திய நாத்திகர் சிலருக்குத் தெரியும். சாதிப்பித்தர்க்கும் தெரியும். சினிமா உலகத்தார்க்கும் தெரியும், ரேடியோ நிலையத்தார்க்கும் தெரியும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

நாலவர்க்கு நன்னெறி உணர்த்திய இறைவனுக்கு இடம் தந்த கல்லால மரம் போல், பல்லோர்க்குப் பண்பு உணர்த்தப் பயன்படும் வேப்பமரம் ஒன்று சாது அச்சுக் கூடத்தில் உள்ளது. அதன் நிழலில் அவரிடம் யோசனை கேட்க வந்தோர் பலர்; மிகப்பலர். அவர்களுள் சிலர் அரசியல் தலைவர்கள்; சிலர் மொழிப் புலவர்கள்; சிலர் சமயக் கணக்கர், சிலர் சமூகச் சீர்திருத்தக்காரர். சிலர் முதலாளிகள், தொழிலாளிகள் பலர், வாழ்க்கைப் போராட்டத்தால் வாடியவர் சிலர், முதியவர் சிலர், இளைஞர் பலர்; அனைவர்க்கும் நண்பராய்ச் சோர்வு போக்கி அறிவும் ஊக்கமும் ஊட்டியவர் திரு. வி. க . அவர் அறிவின் ஆற்றலுக்கு அந்த வேப்பமரம் சான்று .

அறிவின் பெருமையை ஒருவாறு அறிந்தோம். உணர்வின் அருமையை ஒரு சிறிது உணர்வோம். வாழ்க்கையில் பெரிய பெரிய நிகழ்ச்சிகளை இங்குக் கருத வேண்டாம். சிறுசிறு நிகழ்ச்சிகளே போதும் .

ஒரு தோட்டத்தில் செடி ஒன்று வேலியில் அமைந்து அழகு செய்தது. அதைக் கண்ட அம்மையார் ஒருவர் நேரே வந்து அதன் இலைகளைப் பறித்தார். இலைகள் முழுவதும் பறித்து விடுவர் போல் தெரிந்தது . அங்கு திரு. வி. க. நண்பர் ஒருவருடன் இருந்தார். நண்பர் இலைபறிக்கும் அம்மையாரை நோக்கி, " யார் அம்மா அங்கே ? செடி இன்றைக்கே போய்விடும் போல் இருக்கின்றது. போ அம்மா போ " என்றார். அம்மையார் பேசாமல் சென்றுவிட்டார். திரு. வி. க. முகம் வாடினார். நண்பர், முன் பேசிக்கொண்டிருந்த பழம் பேச்சைத் தொடர்ந்து பேசினார். திரு. வி. க. மனம் பேச்சில் திரும்பவில்லை, வாளா தலையசைத்துக் கொண்டிருந்தார். நண்பருடைய பழம் பேச்சு முடிந்தது, திரு. வி. க. பேசத் தொடங்கினார். "அந்த அம்மையாரை அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. யாரோ ஓர் அம்மையார், எதற்காகவோ பறித்தார். ஏழ்மையால் கீரையாகச் சமைத்து உண்ண விரும்பியிருக்கலாம். அல்லது வைத்தியத்திற்கு மருந்தாக வேண்டியிருக்கலாம். என்ன காரணமோ ? அந்தத் தாய் மனம் எவ்வளவு வருந்தியிருக்குமோ நானாக இருந்தால் செடியை அடியோடு பிடுங்கிக் கொண்டு போனாலும் சும்மா இருந்திருப்பேன் " என்று வருந்தினார். திரு. வி. க. மனம் எதையோ எண்ணி வருந்திக் கொண்டிருப்பதை நண்பர் அப்போதுதான் அறிந்தார் .

©KTBS NOT TO BE REPUBLISHED

எளிமையும் பொறுமையும் இரக்கமுமே வடிவான திரு. வி. க. பெரிய வீரர். அவர் வீர உணர்வு எத்தகையது என்பதை மேடைகளில் அவரோடு பழகியவர் அறிவர். மாநாடு ஒன்று முடிந்தது, குழப்பத்தில் முடிந்தது, காலிகள் குழப்பம் விளைவித்தார்கள். மாநாடு நடத்தியவர்கள் அஞ்சி முடித்துக் கொண்டார்கள். அங்கு திரு. வி. க. வுக்கும் பெரும் பொறுப்பு இல்லை. பொறுப்புச் சிறிதே. காணச் சென்றிருந்தார் எனலாம்; மாநாட்டுத் தலைவரும் மற்றவர்களும் குழப்பத்திற்கு அஞ்சி விரைந்து நடந்தார்கள். அந்த குழுவில் திரு. வி. க. இல்லை. திரும்பிப் பார்த்தோம், மேடையில் சில பெரிய காலிகளைச் சினந்து கடிந்து பேசிக் கொண்டிருந்தார். நாங்கள் சென்று அவரை அன்புடன் வேண்டி அழைத்துச் செல்ல முயன்றோம். மறுத்து இறுதியில் இணங்கினார். கடற்கரைக்குச் சென்றோம், மணலில் இருந்தார். மேடையில் கொண்ட கடுஞ்சினம் குறைந்து மறைந்து விட்டது. மணலில் துப்பினார் எச்சில். அன்று, இரத்தமே கண்டேன். திடுக்கிட்டேன், அவர் உள்ளத்தில் எழும் உண்மையான உணர்வு உடலில் இரத்த நாடிகளை அலைத்து விடுகின்றது. உள்ஒன்று புறம் ஒன்றாகப் பேசக் கற்றிருந்தால் உடலுக்கு ஊறுஇல்லை !

ஒரு பள்ளிக்கூட ஆண்டு விழா. தலைமையாசிரியர் அவர்கள் அந்த விழாவைத் திரு. வி. க. வே தலைவராக இருந்து நடத்தவேண்டும் என்று விரும்பினார். திரு. வி. க. எளிதில் உடன் படமாட்டாரே என்று மற்ற ஆசிரியர்கள் பதில் கூறினார்கள். " நானோ நீங்களோ சென்று அழைத்தால் அவர் உடன்படுவது அருமை தான். நாம் போக வேண்டாம். மாணவர்களை அனுப்பினால் " இளம் பிள்ளைகள், எப்படி மறுப்பது " என்று ஒத்துக் கொள்வார். அது தான் வழி " என்று தலைமை ஆசிரியர் கூறினார், வெற்றியும் பெற்றார் .

இந்த வழக்கம் இல்லையானால் திரு. வி. க. வாழ்வில் சிறந்து விளங்கியிருப்பார். அந்தப் பழக்கம் இல்லையானால் உலகத்தில் உயர்ந்து விளங்கியிருப்பார் என்று அறிஞர்கள் அன்போடு எண்ணுகிறார்கள். அவர் யந்திரமா ? காற்றாடியா ? அவரைத் தடுத்தவர் யார் ? அருளறம் உணர வேண்டாம் என்று புத்தர் பெருமானைத் தடுத்தவர் இல்லை, ஓயாது எண்ண

@KTBS NOT TO BE REPUBLISHED

வேண்டாம் என்று ஆர்க்கிமெடிஸைத் தடுத்தவர் இல்லை. வரையாது வழங்க வேண்டாம் என்று பாரியைத் தடுத்தவர் இல்லை. கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டாம் என்று மாணிக்கவாசகரைத் தடுத்தவர் இல்லை, ஏழை மக்கள் வாழ்வை எண்ண வேண்டாம் என்று திரு. வி. க. வைத் தடுத்தல் கூடுமோ ? உரிமையின் உயர்வை உணரவேண்டாம் என்று தடுத்தல் இயலுமோ ? பெண்ணின் பெருமை பேச வேண்டாம் என்று தடுத்தல் முடியுமோ ? தடுக்க முடிந்திருந்தால், இன்று அவரைச் செல்வம் சூழ்ந்திருக்கும்; அரசு போற்றியிருக்கும்; உலகம் உயர்த்தியிருக்கும். ஆனால் அவர் யந்திரமா ? காற்றாடியா ? திரு. வி. க. யந்திரமும் அல்லர் ; காற்றாடியும் அல்லர், திரு. வி. க ஒரு வானம்பாடி; வெள்ளாடை சூழ்ந்த மெல்லிய உடலும், புலமைப் பொலிவுற்ற அழகிய முகமும், அருள் பெருகும் கரிய விழியும் பெற்ற வானம்பாடி; சமரசவானம் கண்டு களிக்கும் வானம்பாடி; தமிழகம் தழைக்க, உலகம் உய்யப் பொதுமை மழை பொழியுமாறு வாழ்த்து பாடும் வானம்பாடி .

நூல்குறிப்பு :

இக்கட்டுரை தமிழ்த் தென்றல் திரு. வி. க. என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் பல புலவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூல். இதைத் தொகுத்தவர் டாக்டர் ஈ.ச விசுவநாதன் அவர்கள். இவர் தென் அமெரிக்காவில் உள்ள கயனா பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பேராசிரியராக இருந்தவர் .

ஆசிரியர்குறிப்பு :

இக்கட்டுரையின் ஆசிரியர் முனைவர் மு . வரதராசனார் ஆவார். இவர் தமிழ்ப் பேராசிரியர்களிடையே டாக்டர் மு. வ. என்றழைக்கப் பெறுபவர். தமிழ் நாட்டின் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராய் இருந்தவர். பல உரைநடை நூல்களையும் ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளவர் .

@KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற்பொருள் :

உள்ளம் கசிந்து - மனமிரங்கி ; ஈதல் - கொடுத்தல் ; மல்கும் - பெருகும்; பகர்தல் - சொல்லுதல் ; விழையும் - விரும்பும் ; இடுக்கண் – துன்பம் ; ஒருங்கே - ஒன்றுசேர்ந்து ; திட்பம் - உறுதி ; கற்றா - கன்றுடைய பசு; நாத்திகர் - கடவுள் மறுப்பாளர். காலிகள் - வீணன்.

பயிற்சி

அ) I. சரியான விடையைத் தெரிவு செய்க ;

1. இவர்களைக் காற்றாடிகள் என்றழைக்கலாம் .

அ) அறிவை வளர்ப்போர் ஆ) உணர்வு பெருகுவோர்

இ) ஆற்றலை யுடையோர் ஈ) அரசர்கள்

2. இவர் ஒரு வானம்பாடி .

அ) மு.வரதராசனார் ஆ) அ.ச.ஞானசம்பந்தன்

இ) திரு. வி. க. ஈ) வ. உ. சி

3. கற்றாவின் மனம் போலக் கசிந்து உருகியவர் .

அ) ஆர்க்கிமெடிஸ் ஆ) மாணிக்கவாசகர்

இ) டாக்டர் மு.வ ஈ) குமரகுருபரர்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. மனித யந்திரங்கள் ______ ஆனவை .
2. திரு. வி. க. அறிவும் ______ ஒருங்கே நிறைந்தவர் .
3. இறைவன் நால்வருக்கு ______ மரத்தின் கீழிருந்து நன்னெறி உணர்த்தினார் .

NOT TO BE REPUBLISHED ©KTBS

III. பொருத்துக :

அ		ஆ
1. புத்தர்	-	முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்தவர்
2. ஆர்க்கிமெடிஸ்	-	அமைச்சர் பதவி இழந்து பித்துப் பிடித்தலைந்தவர்
3. பாரி	-	மனைவியையும் மகனையும் துறந்து காட்டிற்குச் சென்றவர்
4. மாணிக்கவாசகர்	-	தன்னை மறந்து எண்ணத்தில் ஆழ்ந்து கொலைக்கு ஆளானவர் .

IV. ஒரு வாக்கியத்தில் விடை தருக :

1. யந்திரங்களாக மாறுகிறவர்கள் எதை நோக்கமாகக் கொண்டு வாழ்கிறார்கள் ?
2. எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப் படாமல் இருப்பவர் யார் ?
3. திரு. வி. க. காற்றாடிகள் என்று சொல்லுகின்ற இருவரைக் குறிப்பிடுக ?
4. திரு. வி. க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?

V. மூன்று வாக்கியங்களில் விடை தருக :

1. திரு. வி. க.வை ஒரு வானம்பாடி என எவ்வாறு கூறலாம்?
2. ஏழை மக்கள் வாழ்வை எண்ண வேண்டாம் என்று திரு. வி. க. வைத் தடுத்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் ?

VI. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

1. யந்திர மனிதர்களால் உண்டாகும் தீமைகள் யாவை ?
2. திரு. வி. க. அவர்களின் நினைவாற்றலுக்குச் சான்று தருக.
3. திரு. வி. க. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாததால் அவர் அனுபவித்த துன்பத்தினைக் கூறுக

@KTBS
NOT TO BE REPUBLISHED

VII. பத்து வரிகளில் விடை தருக :

1. உணர்வே பெருகியிருப்போருடைய வாழ்க்கை எவ்வாறிருக்கும்?
2. திரு. வி. க. அறிவுத் திட்பம் வாய்ந்தவர் என்பதை உணர்த்துக

VIII. இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக :

1. " மற்ற யந்திரங்கள் இரும்பால் ஆனவை,
   மனித யந்திரங்கள் மூளையால் ஆனவை "
2. " இவர்கள் வாழ்க்கையில் ஒழுங்கு என்ற ஒன்று
   இல்லை, கடமை என்ற ஒன்று இல்லை "
3. "அந்த, அம்மையாரை அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது "
4. "நானோ நீங்களோ சென்று அழைத்தால் அவர் உடன்படுவது அருமைதான் "
5. "வரையாது வழங்க வேண்டாம் என்று பாரியைத் தடுத்தவர் இல்லை. "

ஆ) மொழிப்பயிற்சி

1. சேர்த்தெழுதுக :

பித்து + பிடித்து ; இயற்கை + அறம் ;

கவலை + இல்லை ; திசை + எல்லாம் .

2. பிரித்தெழுதுக :

பெருகியிருக்கும் ; கொடுமையிலிருந்து ;

அச்சுக்கூடம் ; பேச்சைத்தொடர்ந்தால் .

3. எதிர்ச் சொல் தருக :

தூய்மை , உண்மை , ஏறு , நினைந்து , பலர் .

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

ஆராய்ச்சித்திறமை ; சிலர்வாழ்க்கை; உறவுகொள்ள ; எதையோ எண்ணி ; மாநாடு முடிந்தது.

@KTBS NOT TO BE REPUBLISHED

3. சுற்றுச்சூழல்

-தென்கச்சி . கோ. சுவாமிநாதன்

(மனிதன் இன்றைய பொழுது கழிந்தால் போதும், தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற குறுகிய வட்டத்தில் வாழ்ந்து வருகிறான். தன்னைச் சுற்றி, தன்னால் ஏற்படும் சுற்றுப்புறச் சீர்கேட்டைப் பற்றி சற்றும் சிந்திப்பது இல்லை. மாணவர்கள் சுற்றுப்புறச் சீர் கேட்டினால் ஏற்படும் விளைவுகளை உணர வேண்டும் என்ற நோக்கத்தை தென்கச்சி கோ. சுவாமிநாதனின் வானொலி உரை உணர்த்துகிறது .)

இதுவரைக்கும் நாம் அடிக்கடி கவலைப்பட்டது, மனுஷன்கிட்டே இருந்து மனுஷனைக் காப்பாத்தறது எப்படிங்கறதுக்காகத்தான் !

ஆனா இனிமே அதைவிடப் பெரிய கவலை ஒண்ணு வந்துட்டுது ! அது என்னன்னா. . .

மனுஷங்கிட்டேயிருந்து பூமியைக் காப்பாத்தறது எப்படி ? இதுதான் இன்னைக்குப் பெரிய கவலை !

மனுஷனுக்குக் கோவம் வந்தா ‘ சூடா ஆயிட்டான் ’னு சொல்லறது உண்டு. . .

இப்ப பூமிக்கு கோவம் வந்துட்டுது. . . அது சூடா ஆகிக்கிட்டிருக்கு ! பூமிக்கு கோவத்தை உண்டாக்கினது யாரு ? மனுஷன்தான் ! இன்னும் 25 வருஷத்துலே பூமியின் உஷ்ணம் சராசரி 1 முதல் 2 டிகிரி வரைக்கும் அதிகரிக்கும்னு விஞ்ஞானிகள் சொல்றாங்க. சில பகுதிகள்ளே 6 டிகிரி வரைக்கும் கூட அதிகம் ஆகலாமாம் !

சரி... ஆயிட்டு போவுது ... அதனாலே நமக்கு என்ன ? ன்னு இருந்துட முடியாது ! அதனாலே பல பாதக விளைவுகள் ஏற்படும். உதாரணத்துக்கு ஒண்ணு பார்ப்போம் !

பூமியோட வெப்பம் அதிகரிக்கும்போது வடதுருவம் தென்துருவம் இங்கேயெல்லாம் இருக்கிற பிரம்மாண்டமான பனிக்கட்டிகள் உருக ஆரம்பிக்கும். அதனாலே கடல்மட்டம் உயரும். பலதீவுகள் மூழ்க வேண்டிய நிலைமைக்கு ஆளாயிடும். உலகம் பூரா கடல் ஓரப்பகுதிகள் மூழ்கும். அங்கே இருக்கிறவங்கள்லாம் வேற இடம் பார்க்க வேண்டியதுதான் !

© KTBS NOT TO BE REPUBLISHED

உதாரணத்துக்கு கடல் மட்டம் 1 மீட்டர் உயர்ந்தால் வங்கதேசத்துலே 4 லேயிருந்து 8 கோடி மக்கள் வேறே இடம் தேடவேண்டியிருக்கும் !

சரி . . . பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?

இயற்கையின் சமநிலையைக் கெடுத்துட்டான் .

நாம பிராணவாயுவை எடுத்துக்கிட்டு கார்பன் டை ஆக்சைடை வெளியிலே விடுகிறோம். இந்த கார்பன் டை ஆக்சைடை மரம் செடி கொடியெல்லாம் எடுத்துக்கிட்டு பிராணவாயுவை வெளியிலே விடுது . . .

இது ஒழுங்கா நடந்துகிட்டு இருந்தா சரி . . . ஆனா காடுகளை மனுஷன் அழிக்க ஆரம்பிச்சான், கார்பன் டை ஆக்சைடு சேர்ந்து போச்சு . . . அதையெல்லாம் மாத்திக் கொடுக்கறது யாரு ? இதைத் தவிர வாகனங்கள் தொழிற்சாலைகள் விடுகிற புகை வேறே காற்றிலே கலக்குது .

சூரியன் உமிழும் அல்ட்ரா வயலெட் கதிர்கள் கிட்டேயிருந்து உயிரினங்களைப் பாதுகாக்கிற கேடயம் ஓசோன் படலம், இது தேஞ்சுக்கிட்டு வருது .

C.F.C ன்னு சொல்றாங்களே குளோரோ ஃப்ளோரோ கார்பன். இந்த ரக ரசாயனத்தை ரெப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷனர், தீயைணப்புக் கருவிகள் இதுலேயெல்லாம் குளிர்ச்சியை ஏற்படுத்துறத்துக்காக உபயோகப் படுத்தறோம். இதுதான் ஓசோனுக்கு எமன். C.F.C. ஒரு மாலிக்யூல் ஒரு லட்சம் ஓசோன் மாலிக்யூலை அழிக்கக் கூடியதாம் !

இதற்கு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்கணும் !

இயற்கையோட அனுசரிச்சுப் போக வேண்டியதன் அவசியத்தை இப்பத்தான் தீவிரமா உணர ஆரம்பிச்சிருக்கோம் .

அதுக்காகத்தான் உலகத் தலைவரெல்லாம் ஒண்ணு கூடி யோசிக்க ஆரம்பிச்சிருக்காங்க !

இந்த உலகத்துலே மரம், செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள் எல்லாம் சௌக்கியமா இருந்தாத்தான் நாமளும் சௌக்கியமா இருக்க முடியும் ! நம்ம நாட்டுலே குஜராத் வட பகுதியிலே ஆரவல்லிக் குன்றுச்சரிவின் மையத்துலே மிருகங்கள் பறவைகளுக்குன்னே ஒரு

@KTBS NOT TO BE REPUBLISHED

கோயில் இருக்கு, அதுலே பறவைகள், மிருகங்கள் சிற்பங்கள்தான் இருக்கு. கர்ப்பக் கிருகத்திலேயும் அதே சிலைகள்தான். அங்கே வணங்கப்படுற தெய்வங்கள் பறவைகளும் விலங்குகளும்தான் .

தெய்வீகக் கதைகள்லேயெல்லாம் தெய்வங்கள் மிருகங்களையும், பறவைகளையும் வாகனமா வச்சிருக்குன்னு சொல்றதெல்லாம் எதுக்காக? அதோட மதிப்பைப் புரிஞ்சிக்கறதுக்காகத்தான் !

அசோக மன்னர் சாலையோரத்துலே எல்லாம் மரங்கள் நட்டார்ன்னு சரித்திரத்திலே படிக்கிறோமே, அவரு என்ன விவரம் தெரியாமலா செஞ்சார் ?

மிருகங்களுக்கும் மருத்துவ மனைகள் நிறுவினார் அசோகர் அப்படீன்னும் படிக்கிறோமே !

கி.பி.17-ஆம் நூற்றாண்டுலே எழுதப்பட்ட நூல் நீதிசாரம். அது ஓலைச் சுவடியா இருக்கு. தமிழ் நாடு தொல்லியல் துறை தர்மபுரியிலே அதைக் கண்டுபிடிச்சு எடுத்திருக்கு. அதுலே என்ன எழுதியிருக்கு தெரியுமா ?

மரம் வளர்த்தால் நரகம் இல்லை, அப்படின்னு எழுதியிருக்கு .

அந்த அளவுக்கு அப்பவே தெரிஞ்சி வச்சிருக்காங்க ! ஆல், அரசு, வேம்பு இந்த மரங்களையெல்லாம் தெய்வமா நினைச்சி வழிபடற பழக்கம் இப்பவும் கூட உண்டு ! இருந்தும் என்ன பிரயோஜனம்! ? உலகச் சுற்றுச்சூழல் ரொம்ப கெட்டுப்போச்சாமே !

இனிமே எல்லாம் நாம ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். இயற்கையின் படைப்புகளை அழிக்கிறதுக்கு முயற்சி பண்ணக்கூடாது சிலபேரு எதுக்கும் கவலைப் படறதில்லே. ரொம்ப அலட்சியம் ! ஆபீஸ் நண்பர் ஒருத்தர்கிட்டே நான் சீரியசா ! சொல்லிக்கிட்டிருந்தேன் .

இப்படியே போயிக்கிட்டிருந்தா, ஒருநாள் பெரிய பிரளயமே வந்துடும். . கடல்கொந்தளிக்கும். . சூறாவளி வீசும் . . எரிமலை வெடிக்கும். . பூகம்பம் வரும்... ! அப்படின்னேன் . . .

அவரு ரொம்ப சாவகாசமா என்னைப் பார்த்து ,

"அன்னைக்கு ஆபீசுக்கு லீவு விடுவாங்களா சார் ? " அப்படிங்கறார் !

@KTBS NOT TO BE REPUBLISHED

நூல்குறிப்பு :

'இன்று ஒரு தகவல் '- பாகம்-16 என்ற நூலில் உள்ள ஒரு கட்டுரையே இந்தச் 'சுற்றுச்சூழல் '. வானொலியில் தினமும் ஒரு செய்தியைச் சொல்லி வருபவர் தென்கச்சி. கோ. சுவாமிநாதன். அவை 'இன்று ஒரு தகவல்' எனப்பல பாகங்களாக வெளிவந்துள்ளன .

ஆசிரியர்குறிப்பு :

தென்கச்சி சுவாமிநாதன் தமிழகத்து மக்கள் அனைவருக்கும் 'இன்று ஒரு தகவல் ' என்ற வானொலி ஒலிபரப்புக் கட்டுரை மூலம் நேயர்களுக்கு நன்கு அறிமுகமானவர். குழைவான குரலில் கிராமத்துப் பாணியில் பேசுபவர்; மக்களின் வாழ்வியல் சிந்தனை பெருகிட, நேர்மையும் தூய்மையும் உயர்ந்திடச் செய்பவர் தென்கச்சியார் .

NOT TO BE REPUBLISHED ©KTBS

பயிற்சி

அ) I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. பூமிக்கு கோபத்தை உண்டாக்கியது _______ தான் .
2. ஒசோனின் எமன் ________ ஆகும் .
3. _______ மன்னர் சாலையோரத்தில் மரங்களை நட்டார் .
4. _______ வளர்த்தால் _______ இல்லை .
5. _______ படைப்புகளை அழிக்கிறதுக்கு முயற்சி பண்ணக்கூடாது.

II. சரியான விடையைத் தெரிவு செய்க .

1. சூடாகிக் கொண்டிருப்பது ________ .

   அ) பூமி ஆ) வானம் இ) காற்று ஈ) கடல்

2. வட தென் துருவங்களில் உள்ள பனிக்கட்டிகள் உருகுவதால் ______ மட்டம் உயரும் .

   அ) ஏரி ஆ) கடல் இ) ஆறு ஈ) குளம் .

3. சூரியன் உமிழும் அல்ட்ரா வயலெட் கதிர்கள் கிட்டேயிருந்து உயிரினங்களைப் பாதுகாக்கிற கேடயம் ______ _______.

   அ) குளோரோ ஃப்ளோரோ கார்பன் ஆ) ரெப்ரிஜிரேட்டர்

   இ) ஒசோன் படலம் ஈ) கார்பன் டை ஆக்சைடு .

III. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக .

1. இன்றைய பெரிய கவலையாகத் தென்கச்சியார் எதனைக் கூறுகிறார் ?
2. மனிதன் செய்த தவறாக எதனைக் குறிப்பிடுகிறார் தென்கச்சி சுவாமிநாதன் ?
3. C.F.C என்றால் என்ன ?
4. நாம் எப்போது செளக்கியமாக இருக்கமுடியும் ? என்று தென்கச்சி சுவாமிநாதன் கூறுகிறார் ?
5. மிருகங்களுக்கு மருத்துவமனை நிறுவிய மன்னர் யார் ?
6. நாம் எந்த ரக இரசாயனத்திற்கு மாற்றுப் பொருள் கண்டு பிடிக்க வேண்டும் ?

IV. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக .

1. C.F.C ஓசோனில் ஏற்படுத்தும் பாதிப்பு யாது ?
2. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மை யாது ?
3. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக ?

V. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக .

1. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளில் ஒன்றினை எழுதுக .
2. ஆரவல்லிக் குன்றின் சரிவில் உள்ள கோயில் பற்றி எழுதுக .

VI. பத்து வரிகளில் விடை எழுதுக .

1. நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம் ?
2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நம் முன்னோர்களிடம் இருந்ததைச் சான்றுடன் விளக்குக .

VII. இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக .

1. சரி . . . . . . பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?
2. மரம் வளர்த்தால் நரகம் இல்லை .
3. அன்னைக்கு (அன்றைக்கு) ஆபீசுக்கு லீவு விடுவாங்களா சார்?

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. மொழிப்பயிற்சி

தெரிந்து கொள்க

1. மனுஷங்கிட்டேயிருந்து பூமியைக் காப்பாத்தறது எப்படி ? இதுதான் இன்னைக்குப் பெரிய கவலை !

- பேச்சுநடை

மனிதனிடமிருந்து பூமியைக் காப்பாற்றுவது எவ்வாறு ?

இதுதான் இன்றைக்கு மாபெரும் சிக்கல் !

2. மனுஷனுக்குக் கோவம் வந்தா சூடா ஆயிட்டான்னு சொல்றது உண்டு .

- பேச்சு நடை

மனிதனுக்குக் கோபம் வந்தால் சூடாக ஆகிவிட்டான் என்று சொல்வது உண்டு .

@KTBS
NOT TO BE REPUBLISHED

4. உண்டாலம்ம இவ்வுலகம்

- பேராசிரியர் முனைவர். இரா. மோகன்

(தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழுநர் இருப்பதால்தான் இவ்வுலகம் அழியாமல் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இளம் பெருவழுதி இரத்தினச் சுருக்கமாகத் தெரிவித்துள்ளார். புகழுக்காக உயிரையும் விடத் துணிந்தவர் இருப்பதால் உலகம் நிலை பெற்றிருக்கிறது என்கிறார் அவர் . இக்கட்டுரை ஆசிரியர் பாரதிதாசன் கூறியதையும் அதியமான் செய்ததையும் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளது அருமையிலும் அருமை .)

" கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எழுதிய ' உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் கொள்ளலர் ' என்ற பாடலை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எவ்வளவு உயரிய கருத்துக்களைத் தமிழ்ப் பாடல்கள் கொண்டிருக்கின்றன என்பதற்கு இதுவே சான்று "

- ஜார்ஜ் ஹார்ட்

" திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய் மொழி புகழ் செம்மொழியாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம் " (தமிழ் மொழியின் வரலாறு . ப 71) என்பது தனித்தமிழ் இயக்கத்தின் முன்னவர் - முனைவர் - பரிதிமாற் கலைஞரின் முடிந்த முடிபு. இம் முடிபுக்குப் பல்லாற்றானும் பொருந்தி வரும் பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. அப்பாடலைப் பாடியவர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் அரசப் புலவர் ஆவார். பொதுவியல் திணையில் பொருள்மொழிக் காஞ்சித் துறையில் அமைந்த அருமையான பாடல் அது !

இளம்பெருவழுதி உலகில் வாழும் மனிதர்களை இருவகையினராகப் பாகுபாடு செய்கின்றார். தமக்கென வாழ்வோர் ஒரு வகையினர் ; பிறர்க்கென வாழ்வோர் பிறிதொரு வகையினர். தான் உண்டு தன் வேலை உண்டு என எப்போதும் இருப்போர் மற்றவர்களைப் பற்றி

NOT TO BE REPUBLISHED @KTBS

மருந்துக்குக் கூடச் சிந்திக்காமல் தன் மனைவி, தன் மக்கள் என இருபத்து நான்கு மணிநேரமும் தன்னல உணர்வுடனேயே வாழ்ந்து வருவோர் முதல் வகையினர். இவர்களைக் ‘ கடுகு போல் உள்ளம் கொண்டோர் ’ எனக் குறிப்பிடுவார் பாவேந்தர் பாரதிதாசன். ‘ உடல் மண்ணுக்கு, உயிர் கொண்ட குறிக்கோளுக்கு ’ எனத் தம் வாழ்நாளின் இறுதி மூச்சு வரை பொதுநல உணர்வோடு பிறர்க்கென வாழ்ந்து வருவோர் இரண்டாம் வகையினர்; ‘ தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம், தாயுள்ளம் கொண்டவர்கள் ’ என இவர்களுக்குப் புகழாரம் சூட்டுவார் பாரதிதாசன் (பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி ப 131)

அடுத்து, பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெனத் தம் பாடலில் பட்டியல் இடுகின்றார் இளம்பெருவழுதி. இவர்கள் இந்திரனுக்கு உரிய அமிழ்தமே கிடைத்தது என்றாலும் அது கிடைத்தற்கு அரியது; மிகவும் இனிமையானது என்று தாமே தனித்து உண்ண மாட்டார்களாம். அதியமான்நெடுமான் அஞ்சி தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை - தான் உண்ணாமல், தன் ஆருயிர்த் துணைவியார் பட்டத்து அரசியார்க்குக் கொடுக்காமல், தன் அருமைப் புதல்வன் பொகுட்டெழினிக்கும் தராமல் தமிழ்ப் பெருமாட்டி ஔவையார்க்கு நல்கியமை இங்கே நினைவு கூரத்தக்கதாகும் .

பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர்களிடம் காணப்படும் பிறிதோர் அரிய பண்பு அவர்கள் வாழ்க்கையை உடன்பாட்டுச் சிந்தனையுடனே (Positive Thinking) அணுகுவது ஆகும். அவர்கள் வாழ்வில் ஒரு போதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள். சோர்வு – சோம்பி இருக்கும் பண்பு - அவர்களை ஒரு காலும் கிட்ட நெருங்காது. அதே நேரத்தில் பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சி வாழும் பண்பும் அவர்களிடம் குடிகொண்டிருக்கும். ‘ அஞ்சுவது அஞ்சல் ’ (குறள் 428) என்னும் வள்ளுவர் வாய்மொழி அவர்கள் வாழ்க்கையில் பின் பற்றி வரும் ஒரு நெறி ஆகும் .

புகழ் கிடைக்கும் என்றால், அதற்காகத் தமது இன்னுயிரையும் கொடுப்பார்கள். மாறாக, பழி வரும் என்றால் உலகம் முழுவதுமே கிடைப்பதாக இருப்பினும், அதனைச் சற்றும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இது பிறர் நலம் பேணுவோரிடம் கொலு வீற்றிருக்கும் ஓர் அரிதினும் அரிய பண்பு ஆகும். நெஞ்சில் உரம், நேர்மைத் திறன் - இதுவே அவர்கள் தமது உயிரினும் மேலாகப் பின்பற்றி வரும் தாரக மந்திரம் ஆகும் .

NOT TO BE REPUBLISHED © KTBS

‘ மனக் கவலை மாற்றல் அரிது ’ (குறள் - 7) என்பார் வள்ளுவர். ஆனால் வாழ்வில் பொது நலம் பேணி வருவோரின் மனங்களில் கவலையின் நிழல் கூடப் படியாது. துன்பத்திற்குத் துன்பம் தரும் வல்லமை படைத்தவர்களாக அவர்கள் விளங்குவார்கள் .

மேலே குறிப்பிட்ட மாண்புகள் எல்லாம் ஒருங்கே பெற்றவராக அமைந்து, தமக்கென்று எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளாமல், வலிய முயற்சியாளராய்ப் பிறர்க்கென வாழ்வோர் இருப்பதனாலேயே இந்த உலகம் மண்ணாகிப் போகாமல் இன்னமும் இருந்து வருகின்றது. சீரிய இச்சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்ட இளம்பெருவழுதியின் புறப்பாடல் வருமாறு .

" உண்டா லம்ம இவ் உலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், ‘ இனிது ’ எனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவு இலர் ;
துஞ்சலும் இலர். பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் : அயர்வு இலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மை யானே " (புறம் 182)

" பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் " (996)

என்னும் குறுகத்தறித்த குறளின் அரிய விரிவாக்கமே ஒன்பது அடிகளால் அமைந்த இந்த அகவற் பா .

‘உண்டால் அம்ம இவ்வுலகம் ’ என்னும் தொடரில் உள்ள ‘ அம்ம ‘என்பது வியப்புச் சொல் என்பர் உரையாசிரியர். இவ்வளவு கொடிய நிகழ்வுகள், இயற்கை அவலங்கள் எல்லாம் நடந்த பிறகும் உலகம் இன்னமும் மண்ணாகிப் போகாமல் இருந்து வருவது தான் வியப்பினும் வியப்பு. ஆனால், ‘ நல்லார் ஒருவர் இருந்தால் போதும். உலகில் மழை பெய்யும் ’ (நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை) என்பது போல், திசைக்கு ஒருவராக நான்கு நல்லவர்கள்

©KTBS NOT TO BE REPUBLISHED

இருந்தாலே போதும். இந்த உலகம் ‘ மண்புக்கு மாயாமல் ’ - மண்ணாகி மக்கிப் போகாமல், இருந்து வரும் ! சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஓர் அழகிய முரண் (IRONY) என்ன என்றால், இந்த உலகம் அழியாமல் நிலை பெற்று இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து பாடிய சான்றோன் கடலுள் மூழ்கி மாண்டு போனது தான்! ஆம், ‘ உண்டாலம்ம இவ்வுலகம் ’ எனத் தொடங்கும் ஒப்பற்ற புறநானூற்றுப் பாடலைப் பாடிய புலவர் ‘ கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ’ ஆவார்! மூதறிஞர் இரா. இளங்குமரனார் குறிப்பிடுவது போல், " இளமையிலேயே பேரறிவாளனாய் விளங்கியமையைக் காட்டும் வகையில் இளம்பெருவழுதி என்றனர் போலும் ! " (புறநானூறு மக்கள் பதிப்பு, ப 313)

ஆசிரியர்குறிப்பு :

பேராசிரியர் முனைவர் இரா. மோகன் 22.04.1950-இல் மதுரையில் பிறந்தார். பெற்றோர் இராம மூர்த்தி – இராசலெட்சுமி. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அதே பல்கலைக் கழகத்தில் 34 ஆண்டு காலம் பல்வேறு பொறுப்புக்களை வகித்தார். இவர் ஆய்வு, பதிப்பு, தொகுப்பு என்று இதுவரை 82 நூல்களை வெளியிட்டுள்ளார். தற்போது மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழியற்புலத்தில் தகைசால் பேராசிரியராகப் பொறுப்பில் உள்ளார் .

அருஞ்சொற் பொருள் :

சீர்த்த – சிறந்த , தேற்றம் - தெளிவு , முன்னவர் - மூத்தவர் , உரம் - வலிமை , முனிவு – கோபம் , அயர்வு – சோம்பல் , நல்குதல் - வழங்குதல் .

பயிற்சி

அ) I. சரியான விடையைத் தெரிவு செய்க ;

1. ‘ உண்டாலம்ம இவ்வுலகம் ’ என்று தொடங்கும் பாடலை எழுதியவர் _______________

   அ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ) சோழன் நல்லுருத்திரன்
   இ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ஈ) சேரன் செங்குட்டுவன் .

2. தனித்தமிழ் இயக்கத்தின் முன்னவர் ______

   அ) வ. வே. சு. ஐயர் ஆ) சோமசுந்தரபாரதியார்
   இ) பாரதிதாசன் ஈ) பரிதிமாற்கலைஞர் .

© KTBS NOT TO BE REPUBLISHED

3. இளம்பெருவழுதி மனிதர்களை எத்தனை வகையாகப் பாகுபாடு செய்கின்றார்? ______

அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஐந்து

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. அதியமான் நெடுமான் அஞ்சியின் மகன் ______
2. நல்லார் ஒருவர் உளரேல் உலகில் ______
3. உடல் மண்ணுக்கு உயிர் கொண்ட ______

III. பொருத்துக :

அ	ஆ
1. பொருள் மொழிக்காஞ்சி	அ) இளம்பெருவழுதி
2. அதியமான் நெடுமானஞ்சி	ஆ) திருவள்ளுவர்
3. அஞ்சுவது அஞ்சல்	இ) நிலைத்த பொருள் இதுவென்பது
4. கடலுள் மாய்ந்து போனவர்	ஈ) ஔவையார் .

IV. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. மொழியின் இலக்கணம் யாது ?
2. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இரு வகையினர் யாவர் ?
3. அதியமான் நெல்லிக்கனியை யாருக்குக் கொடுத்தான் ?

V. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக ;

1. பாரதிதாசன் கடுகு உள்ளம் கொண்டவர் என்று யாரைக் கூறுகின்றார் ?
2. இளம்பெருவழுதியைப் பற்றிய இளங்குமரனாரின் கருத்து யாது ?
3. ‘ உண்டாலம்ம இவ்வுலகம் ’ - என்ற புறநானூற்றுப் பாடல் எந்தக் குறளின் விளக்கமாக அமைந்துள்ளது ?

NOT TO BE REPUBLISHED @KTBS

VI. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :

1. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

VII. பத்து வரிகளில் விடை எழுதுக :

1. பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெவை என்று இளம்பெருவழுதி பட்டியலிடுகின்றார் ?

VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :

1. சோர்வு - சோம்பி இருக்கும் பண்பு அவர்களை ஒரு காலும் கிட்ட நெருங்காது.
2. "அவர்கள் வாழ்வில் ஒரு போதும் வெறுப்பு கொள்ள மாட்டார்கள்"

ஆ) மொழிப் பயிற்சி

1. சேர்த்தெழுதுக :

   நூல் + இலக்கணம் ; புறம் + நானூறு ;

   புகழ் + ஆரம் ; பிறர்க்கு + என .

2. பிரித்தெழுதுக :

   செம்மொழி ; அமைந்திருக்கும் ;

   தமக்கென ; தன்னலம் .

3. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :

   சுட்டிக்காட்ட ; அருமையான பாடல் ;

   கடுகுபோல் உள்ளம் ; வாழும் பண்பு .

இ) செயல் திறன் :

1. எடுத்துக் காட்டைப் போன்று மாறுபட்ட பொருள் தரும் சொல்லை எழுதுக :

(எ-டு) பாடு - காடு

ஒடு - ______

தேடு - _____

வாடு - _____

@KTBS NOT TO BE REPUBLISHED

2. கீழ்வரும் அடிச் சொற்களிலிருந்து வினைச் சொற்களை உருவாக்குக:

அடிச்சொல்	வினைமுற்று	வினையெச்சம்	பெயரெச்சம்	தொழிற்பெயர்
கொடு	கொடுத்தான்	கொடுத்து	கொடுத்த	கொடுத்தல்
தா				
செல்				
வா				
நட				

3. கீழ்வரும் தொடர்களில் உள்ள உருபை எடுத்தெழுதி அது எந்த வேற்றுமைக்குரியது என்பதைக் குறிப்பிடுக :

1. நான் நாளைக்கு வருவேன் _______
2. புறநானூற்றைப் படி ________
3. அதியமானின் மகன் பொகுட்டெழினி ______
4. நெல்லிக்கனி அரசனால் கொடுக்கப்பட்டது ______
5. இது சோழனது நாடு _______

4. அரபு எண்களுக்கு நேரான தமிழ் எண்களை அறிக :

1	2	3	4	5	6	7	8	9	10	100	200
க	உ	ங	ச	ரு	சு	எ	அ	கூ	க0	க00	உ00

விடுபட்ட தமிழ் எண்களை நிரப்புக :

க _ _ _ ரு _ _ _ கூ _

கக _ _ _ கரு _ _ கஅ _ உ0

5. புறநானூற்றுச் செய்யுள் ஒன்றனுக்கு விளக்கம் எழுதிப் பழகுக :

©KTBS NOT TO BE REPUBLISHED

5. இலட்சியம்

- கவிப்பேரரசு வைரமுத்து

J4M2K3

(இக்கடிதம் இலட்சியம் என்றால் என்னவென்று புலப்படாமல் தவிக்கும் இளைஞர்களுக்காக எழுதப்பட்டது. இது இளைஞர்களின் விரக்தியைப் போக்கி, தன்னம்பிக்கையையும் தலைமைப் பண்பையும் தட்டி எழுப்பும் ஒரு படைப்பு ஆகும் .)

என் இனிய நண்பனே !

கடந்த கடிதம் உன்னைக் காயப்படுத்தி இருக்கலாம். அதனால் உன் மனசின் கரைகளில் ஆத்திர அலைகள் கூட அடித்திருக்கலாம் .

அதற்காக நான் வருத்தம் தெரிவித்தால் நான் பொய்யனாகிப் போய் விடுவேன் .

ஊசி போடுகிறவன் மன்னிப்புக் கேட்க மாட்டான் .

என் கோபத்திலிருக்கும் சோகத்தை நீ புரிந்து கொள்ள வேண்டும் .

இன்றைய இளைஞனே ! உனது பயணம் எதை நோக்கி என்று உனது பிம்பத்தை நீ கேட்டதுண்டா ?

பிறப்பது நம் கையிலில்லை, இறப்பது நம் கையிலில்லை. வாழ்வதற்கு மட்டும் நாம் யார் என்ற வறட்டு வேதாந்தத்தின் மீது வாள் வீசு !

தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும் ஏற்பாடுகளையும் இடறிவிடு !

மரணம் மெய் என்பது எவ்வளவு பெரிய உண்மையோ-வாழ்வு பொய் என்பதும் அவ்வளவு பெரிய பொய்யே. வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் உண்மையானது. அந்த நிமிடங்கள்

இலட்சியங்களால் மட்டுமே கௌரவிக்கப்படுகின்றன .

காலம் இறந்து விடுகிறது. ஆனால் அது மனிதனின் செயல்களால் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால்; ஆனால் அந்த இறந்தகாலம் தாஜ்மஹாலின் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறது .

@KTBS NOT TO BE REPUBLISHED

திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன் தான் ; ஆனால் இன்னும் அவன் இறந்துவிடவில்லை .

நிகழ்கால பூமியைச் செதுக்கிக் கொடுத்ததே இறந்த காலத்தின் இலட்சியமும் உழைப்பும் தாம்.

இலட்சியமில்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகிற சட்டை மாதிரி உள்ளீடற்றுத் தள்ளாடுகிறது .

இந்திய இளைஞனே ! இன்று உனது இலட்சியமென்ன ? காற்றின் போக்கில் பறக்கும் காகிதமாய் நம்மில் பலர்க்கு இலக்கு என்ன என்பது தீர்மானமாகாமலே இருக்கிறது .

பல நேரங்களில் அதை நாம் தீர்மானிப்பதென்பது சாத்தியமில்லாமலிருக்கிறது.

எனவே, நம் இளைஞர்களில் பலருக்கும் இருக்கும் வரைக்கும் சுவாசிப்பதே இலட்சியமாயிருக்கிறது .

அல்லது, சுவாசிக்க முடிந்த வரைக்கும் இருப்பதே இலட்சியமாயிருக்கிறது.

இளைஞனே !

உனது இலட்சியம் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் கூட இருக்கலாம் .

அல்லது, சூரிய மண்டலத்தைப் போல் தொட முடியாத தூரத்திலும் இருக்கலாம் .

ஆனால், ஏதாவது ஒன்று இருக்கட்டும் .

கழுதையில் சவாரி செய்கிறவன் கழுதையின் வாயருகில் கேரட்டைக் காட்டிக் கொண்டே போவதைப் போல் உனது இலட்சியத்தைக் காட்டிக் கொண்டே உன்னை நீ வழி நடத்து .

உனது பதினேழாவது வயதிலிருந்து இருபத்து நான்காவது வயதிற்குள் உனது திசை எதுவென்பதை நீ தீர்மானிக்கத் தெரிந்து கொள்ளாவிட்டால் உனது பயணத்தில் நீ பாறையில் மோதிய பந்தாய்த் திரும்பிவர வேண்டியிருக்கும் .

அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே - உனக்கு முதுமை வந்துவிடும் .

© KTBS NOT TO BE REPUBLISHED

ஏனென்றால் நமது கல்வி, விரல்களைத்தான் வேலை வாங்குகிறதே தவிர மூளையையும், மனசையும் அது முழுமையாக்கவில்லை .

எனவே தான், நம்மில் பலர் ஒரு சிறு தோல்வியிலும் கூட காளானில் இடிவிழுந்த மாதிரி கருகிப் போகிறோம் .

உனது இலட்சியம் என்று நீ கோடு கிழித்துக் கூறுவது எதை ? மருத்துவராவது – பொறியியல் வல்லுனராவது – ஆசிரியராவது - எழுத்தாளராவது – ஓவியராவது – தனித்தொழில் தொடங்குவது இவை போன்ற ஆசைகளுக்கெல்லாம் நீ இலட்சியங்கள் என்று நாமகரணம் சூட்டிக் கொள்ளக் கூடாது .

இவைகளெல்லாம் இலட்சியங்களல்ல ; நீ தேர்ந்தெடுக்கும் துறைகள் - அவ்வளவுதான் .

இந்தத் துறையில் நீ வாழ நினைப்பது உன் விருப்பம், இந்தத் துறையை நீ வாழ வைப்பது உனது இலட்சியம். நீ ஈடுபடும் துறையில் உன் பெயர் சொல்லும் முத்திரை என்ன ?

குறைந்த பட்சம் உனது இலட்சியம் என்பது அதுதான். நம்மில் பலர் ஒரு நாற்காலி கிடைக்கும் வரைக்கும் தீயைப் போல் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள் .

கிடைத்த பிறகோ அந்த நாற்காலியைப் போல் விறைத்துப் போகிறார்கள்.

நம்முடைய அகராதியில் ,

அரசாங்க ஊழியன் என்பவன் ஒன்றாம் தேதி மட்டும் உறங்காதவன் .

மருத்துவன் என்பவன் தும்மிக் கொண்டே ஜலதோஷத்திற்கு மருந்து கொடுப்பவன் .

இந்த நிலை மாற வேண்டாமா ?

இதுவரைக்கும் இலட்சியம் என்று ஒன்று இல்லாவிட்டாலும் இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள் .

இலட்சியம் என்பது உன் எதிரியல்ல ; நண்பனே !

ஆசிரியர்குறிப்பு :

இக்கடிதம் கவிஞர் வைரமுத்து இயற்றிய " சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன் " (இளைய தலைமுறைக்கான கட்டுரைத் தொகுதி)

©KTBS NOT TO BE REPUBLISHED

புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையைப் பற்றிய அனுமானமோ வாழ்க்கையில் ஒரு பிடிமானமோ இல்லாமல் ‘ நீர் வழிப்படூஉம் புணை போல் ’ புறப்பட்ட இடமும் தெரியாமல், போகும் இடமும் புரியாமல் போய்க் கொண்டிருக்கும் இந்திய இளைஞர்களுக்கு எழுதப்பட்டது இந்நூல். இந்நூலில் இருந்து ‘இலட்சியம் ’ என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை பாடமாக இடம் பெறுகிறது .

பயிற்சி

அ) I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. மரணம் மெய் என்பது எவ்வளவு பெரிய உண்மையோ _______ பொய் என்பது அவ்வளவு பெரிய பொய்யே .
2. ________ ஒவ்வொரு நிமிடமும் உண்மையானது .
3. இந்தத் துறையை நீ வாழ வைப்பது உனது ________ .

NOT TO BE REPUBLISHED @KTBS

II. ஒரு வாக்கியத்தில் விடை தருக :

1. நம் கையில் எவை இல்லை என்கிறார் கவிஞர் வைரமுத்து ?
2. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?
3. வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் எவற்றால் கௌரவிக்கப்படுகிறது?
4. இளைஞனின் நண்பன் எது ?

III. மூன்று வாக்கியங்களில் விடை தருக :

1. இளைஞன் தன்னை எதைப் போன்று வழிநடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?
2. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?
3. கவிஞர் எது இலட்சியம் என்றும், எது இலட்சியம் அல்ல என்றும் கூறுகிறார் ?

IV. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

1. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாகத் திரும்பி வர நேரும் ? அதன் விளைவு எது ?

V. பத்து வாக்கியங்களில் விடை தருக :

1. இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

VI. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

1. திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன் தான் ; ஆனால் இன்னும் அவன் இறந்துவிடவில்லை.
2. நம் இளைஞர்களில் பலருக்கும் இருக்கும் வரைக்கும் சுவாசிப்பதே இலட்சியமாயிருக்கிறது.
3. அப்படிப்படும் அடியினால் முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்து விடும்.
4. நீ ஈடுபடும் துறையில் உன் பெயர் சொல்லும் முத்திரை என்ன ?

VII. செயல்முறை:

1. உன் வாழ்வின் குறிக்கோள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

©KTBS
NOT TO BE REPUBLISHED

இலக்கணம்

1. சொல் இலக்கணம்

உரிச்சொல்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற தமிழின் ஐந்திலக்கண வகைகளில் எழுத்திலக்கணமும், சொல் இலக்கணமும் முந்தைய வகுப்புகளில் பயின்று வந்துள்ளீர்கள். எழுத்திலக்கணத்தில் எழுத்துகளின் வகையான - உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், அளபெடை, குறுக்கம் ஆகியவை பற்றிய விளக்கங்களையும் சொல்லிலக்கணத்தில் - பெயர், வினை, இடை, என்ற வகைகளையும், தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர், போன்றவற்றின் இலக்கணத்தையும் ஆசிரியர் மூலம் நினைவு படுத்திக் கொள்க .

செய்யுளுக்கே உரியதாய் பொருள் கொண்டு நிற்பது உரிச்சொல் எனப்படும். அது ஒரு குணம் தழுவியது. பலகுணம் தழுவியது என இரண்டு வகைப்படும்.

1. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

(எ.டு) சாலப்பேசினான்

உறுமீன்

தவச்சிறப்பினன்

நனிபுகழ்

கூர்படை

கழிஉவகை.

இங்கு சால, உறு, தவ, நனி, கூர், கழி-என்ற சொற்கள் மிகுதி என்ற பொருளைக் குறிப்பன.

2. பலகுணம் தழுவிய உரிச்சொல்.

(எ.டு) கடி.

கடி அரண் - உறுதி

கடி வேல் - கூர்மை

@KTBS NOT TO BE REPUBLISHED

கடி மாலை - மண மாலை

கடி மலர் - மணம்

கடி மார்பன் - திரட்சி

கடி முரசு - முழக்கம்

கடி மிளகு - கார்ப்பு

இங்கு கடி என்ற சொல் பலபொருள் குறித்து நிற்கின்றது.

3. அடுக்குத் தொடர்

பொருளுடைய சொற்கள் பல அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும். விரைவு, அச்சம், விலை பகரல் முதலான இடங்களில் அமையும்.

(எ.டு) போ, போ - விரைவு.

தீ, தீ, தீ - அச்சம்

கீரை கீரை - விலை பகரல்

4. இரட்டைக்கிளவி - இருசொல் அடுக்கி ஒலிக்குறிப்புடன் வரும். பிரித்தால் பொருள் தராமல் வருவது இரட்டைக் கிளவி.

(எ.டு) சலசல

பளபள

நற நற

தர தர

சலசல

@KTBS NOT TO BE REPUBLISHED

வேறுபாடு

அடுக்குத் தொடர்	இரட்டைக்கிளவி
1. சொற்கள் பல அடுக்கிவரும்.	இரண்டாக மட்டுமே வரும்.
2. பிரிக்க முடியும் பிரித்தால் பொருள் தரும்.	பிரிக்க முடியாது பிரித்தால் பொருள் தராது.
3. விரைவு, அச்சம், விலை பகரல், பொருளில் வரும்.	ஒலிக்குறிப்பு தோன்ற வரும்.

2. யாப்பிலக்கணம்

செய்யுள் உறுப்புகள் :- எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறும் செய்யுளின் உறுப்புகள் ஆகும். இவற்றுள் தளைவரையிலும் முந்தைய வகுப்புகளில் பயின்றுள்ளீர்கள். இந்த வகுப்பில் அடி, தொடை, பா, பாவகை ஆகியவற்றைக் காண்போம் .

1. அடி

தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது அடி எனப்படும். அவ்வடி குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும். அளவடியை நேரடி என்றும் கூறுவர் .

1. குறளடி – இரண்டு சீர்களைக் கொண்டது
2. சிந்தடி – மூன்று சீர்களைக் கொண்டது
3. அளவடி – நான்கு சீர்களைக் கொண்டது
4. நெடிலடி – ஐந்து சீர்களைக் கொண்டது
5. கழிநெடிலடி – ஆறும் ஆறுக்கு மேற்பட்ட சீர்களையும் கொண்டது

2. தொடை

அடிகளிலும் சீர்களிலும் எழுத்துக்கள் ஒன்றி வருவது தொடை எனப்படும். தொடைகள் எட்டு வகைப்படும் அவையாவன 1. எதுகைத்தொடை 2. மோனைத்தொடை 3. இயைபுத்தொடை 4. அளபெடைத்தொடை 5. முரண் தொடை 6. செந்தொடை 7. அந்தாதித் தொடை 8. இரட்டைத் தொடை என்பன ஆகும்.

3. பா

இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்படுவது. அப்பாக்கள் வெண்பா, அகவற் பா (ஆசிரியப்பா) , கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கினோடு மருட்பா, நூற்பா என்னும் இரண்டும் சேர்ந்து ஆறு வகைப்படும் . இவற்றுள் முதல் நான்கு மட்டுமே சிறப்புடையன ஆகும் .

1. வெண்பா :- ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் அமைந்து, காய்ச்சீரும் அகவற்சீரும் (ஆசிரியம்) வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் கொண்டு மற்றைய சீரும் தளையும் வராமல், செப்பலோசை உடையதாய், நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டால் முடிவது வெண்பாவாகும் .

@KTBS NOT TO BE REPUBLISHED

வெண்பாவின் வகை :- குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடைவெண்பா என ஐந்து வகைப்படும் .

அ. குறள் வெண்பா :

(எ-டு) உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர் . (திருக்குறள் 395)

ஆ. நேரிசை வெண்பா :

(எ-டு) நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை .

2. ஆசிரியப்பா (அகவற்பா) :- நான்கு சீரால் இயன்ற அளவடிகளைக் கொண்டு இயற்சீர் பயின்றும் ; அயற்சீர் விரவியும் ; ஆசிரியத்தளை மிகுதியும் பெற்று பிறதளை மயங்கியும் ; கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் இரண்டுசீரும் கலவாது அகவலோசை உடைத்தாய் மூன்று முதலிய பல அடிகளால் வருவது ஆசிரியப்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாகும்.

ஆசிரியப்பா - நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும் .

(எ-டு) சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோஎன வினவுதி என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போலும்
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புறநானூறு:86)

இது நேரிசை ஆசிரியப்பா வகையைச் சேர்ந்தது .

NOT TO BE REPUBLISHED ©KTBS

Constitution of India

Part IV A (Article 51 A)

Fundamental Duties

It shall be the duty of every citizen of India —

(a) to abide by the Constitution and respect its ideals and institutions, the National Flag and the National Anthem;

(b) to cherish and follow the noble ideals which inspired our national struggle for freedom;

(c) to uphold and protect the sovereignty, unity and integrity of India;

(d) to defend the country and render national service when called upon to do so;

(e) to promote harmony and the spirit of common brotherhood amongst all the people of India transcending religious, linguistic and regional or sectional diversities; to renounce practices derogatory to the dignity of women;

(f) to value and preserve the rich heritage of our composite culture;

(g) to protect and improve the natural environment including forests, lakes, rivers, wildlife and to have compassion for living creatures;

(h) to develop the scientific temper, humanism and the spirit of inquiry and reform;

(i) to safeguard public property and to abjure violence;

(j) to strive towards excellence in all spheres of individual and collective activity so that the nation constantly rises to higher levels of endeavour and achievement;

*(k) who is a parent or guardian, to provide opportunities for education to his child or, as the case may be, ward between the age of six and fourteen years.

Note: The Article 51A containing Fundamental Duties was inserted by the Constitution (42nd Amendment) Act, 1976 (with effect from 3 January 1977).

*(k) was inserted by the Constitution (86th Amendment) Act, 2002 (with effect from 1 April 2010).

NOT TO BE REPUBLISHED ©KTBS

@KTBS
NOT TO BE REPUBLISHED